உ
Senthilandavan Thunai

# TIRUKKURAL

## 1 — 38 CHAPTERS

## TAMIL TEXT

## WITH HINDI TRANSLATION


By

PROF: B. D. JAIN, M. A., L. L. B.
BENARES HINDU UNIVERSITY


★

With Foreword by

SRI ACHARYA NARENDRA DEO
VICE CHANCELLOR, BENARES HINDU UNIVERSITY


Published under the kind patronage of

**His Holiness Sri-la-sri**
**Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl.**
**Sri Kasi Mutt, Tirupanandal**

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியீடு.

உ

செந்திலாண்டவன் துணை

## திருவள்ளுவ நாயனார்

அருளிச்செய்த

# திருக்குறள் - அறத்துப்பால்

## ஹிந்தி மொழிபெயர்ப்பு

காசி பல்கலைக் கழகம் பேராசிரியர்

ஸ்ரீ B. D. ஜெயின் அவர்கள் M.A. L.L.B.

★

காசி, இந்து பல்கலைக் கழக வைஸ் சான்சலர்

திரு. ஆச்சார்ய நரேந்திரதேவ் அவர்கள்

முன்னுரையுடன்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

திருவுளப்பாங்கின்படி வெளியிடப்பெற்றது.

கர ௵ பங்குனி ௴

1952

# பதிப்புரை

**பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள**
**நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ ?**

திருவள்ளுவரைத் தமிழ்நாட்டு **ஸாக்ரடீஸ்** என்று மிகப்பொருத்த மாகச் சொன்னார் ஒரு புலவர். திருவள்ளுவர் அருளியது திருக்குறள் ஒன்றே. யானை ஒரு கன்றுதானே ஈனும் ! " திருக்குறள் **133** மலர்களைக்கொண்ட ஒரு பெரிய பூங்கொத்து. தமிழ்ப் பூங்காவில் இஃதொன்றே மிகப் பெரிய பூந்துணர். இதன் மணம் தமிழ்ப் பூஞ்சோலையில் மலர்ந்துள்ள மற்றெல்லா மலர்களிலும் ஊடுருவி நிலைபெற்றுள்ளது; அம்மலர்களின் மணத்தினோடே தன் மணமும் தனியே அறியும் வண்ணம் மிளிர்கின்றது." திருக்குறள் நூல் தமிழ் மொழிக்குப் பெருமை அளிப்பது ; திருக்குறள் இருப்பதாலே தமிழர்க்கும் மிகப் பெருமை ! இது உலகப் பொது நூல்; காலப்பொது நூலுமாம். திருவள்ளுவமாலை என்ற ஒரு நூல் முழுதும் இதன் புகழையே தெரிவிக்கிறது; இதுபோன்று வேறு எந்த நூலுக்கும் தனிப்புகழ்நூல் இல்லையென்றே கூறலாம்.

இந்நூல் எந்நிலையிலுள்ள மக்களுக்கும் பொதுவான அடிப் படையான ஒழுகலாறுகளை எடுத்தியம்புவது. ஆதலின் இஃது உலக மொழிகள் பலவற்றுள்ளும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. அறிஞர் ஜி. யு. போப் ஆங்கிலத்திலும், அறிஞர் கிரால் ஜேர்மன் மொழியிலும், வீரமாமுனிவர் லத்தீன் மொழியிலும் மொழி பெயர்த்தனர். செந்தமிழ் நாட்டில் உள்ள ஆங்கிலப் புலமை நிரம்பிய தமிழ்ப் பெருமக்கள் சிலரும் ஆங்கிலத்தில் இதனை மொழி பெயர்த்துள்ளனர். இது தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பெற்றுளது. ஆனால் இந்தியப் பொது மொழியாகிய இந்தியில் இதுகாறும் மொழி பெயர்க்கப் பெறவில்லை. வடநாட்டவரும் திருக்குறட் கருத்துக்களை அறிந்து, அவற்றின்படி வாழ்க்கையை நடத்துதற்கு வாய்ப்பு அளித்தற்பொருட்டு இந்தி மொழி பெயர்ப்பு இப்பொழுது வெளி வருகின்றது.

திருக்குறள் வெளியீட்டிற்காக மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயில் திருக்குறள் வெளியீடு அறநிலையத்தார்க்கு **35,000** வெண் பொற்காசுகளின் வட்டிவருமானத்தை ஆண்டுதோறும் அளித்தும்,

சென்னையில் கல்லூரி மாணவிகட்குப் பரிசுகளை ஏற்படுத்தியும், திருக்குறளைப் பரவச்செய்துவரும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** காசிப் பல்கலைக்கழகப் பேராசிரியராகிய **ஸ்ரீ B. D. ஜெயின் M. A., LL. B.** அவர்களைக்கொண்டு இ ந் தி யி ல் மொழிபெயர்ப்பிக்கச் செய்து அச்சிடுவித்து உதவியருளியுள்ளார்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் ஆணைவண்ணம் **குமரகுருபரன்** என்னும் திங்களிதழிலும் திங்களொன்றுக்கு **8** அதிகாரங்கள் வீதம் **1951**-ம் யாண்டு தொடக்க முதல் இது வெளியிடப் பெறுவதாயிற்று.

இப்பொழுது அறத்துப்பால் இந்தி மொழி பெயர்ப்பு நூல் வடிவில் வருகிறது. பொருட்பால் விரைவில் வரவுள்ளது, இத்துடன் திருக்குறள் மூலமும் அச்சிடப்பெற்றுள்ளது.

இவ்வாறு இவ்வரிய பெரிய இனிய திருக்குறள் இந்தி மொழி பெயர்ப்பு வெளியிடப் பெறுதற்கு, மொழிபெயர்க்கச் செய்தும், அச்சிடுவித்து அருளியும் பல்லாற்றானும் உதவிகள் அருளிய **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிநெறிவிளக்கம், கந்தர் கலிவெண்பா, சகலகலாவல்லிமாலை, சிவஞான சித்தியார் சு ப க் க ம் ஆகிய நூல்களின் இந்தி மொழி பெயர்ப்பு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அருளாதரவில் வெளிவந்துலவுதல் நாம் அறிவோம். இங்ஙனமே இவ்விந்திமொழி பெயர்ப்பையும் இந்தி மொழி அன்பர்கள் ஏற்றுத் திருக்குறள் பூங்கோத்தின் மணம் நுகர்வாராக!

இப்பதிப்பிற் காணும் குறிப்புரைகள் அப்போதைக்கப்போது வழங்கி பேருதவி செய்த திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால் **ஸ்ரீ. K. M. வேங்கட்ட ராமய்யா M.A. B.O.L.** அவர்கட்கு இச்சங்கத்தின் மனமார்ந்த நன்றியும் உரித்து.

*அன்பன்*

**T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.**

*நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்.*

*ஸ்ரீவைகுண்டம்,*
*25—1—52.*

# ॥ भूमिका ॥

वाइस चान्सलर

काशी हिन्दू विश्वविद्यालय,
२५—३—'५२

भारत की एकता को पुष्ट करने के लिये यह आवश्यक है कि भिन्न भिन्न प्रान्तों के बीच सौहार्द स्थापित हो। इस के लिये एक दूसरे की भाषा और साहित्य से अवगत होना आवश्यक है। तमिल हमारे देश की बहुत पुरानी भाषा है और इसका साहित्य भी उच्च कोटि का है। उत्तर भारत के लोगों को दक्षिण की भाषाओं का ज्ञान प्राप्त करना चाहिये और उनके साहित्य के अनुपम ग्रन्थों का रसास्वादन करना चाहिये, इसी उद्देश्य से "कुरल" का हिन्दी भाषा में अनुवाद प्रकाशित किया जा रहा है। यह स्तुत्य प्रयास है। "कुरल" तमिल का एक प्रसिद्ध ग्रन्थ है और इस का बडा आदर है। एक सन्त की यह कृति है, इस में उन के नीति वाक्यों का संग्रह है। पुस्तक बडी उपयोगी है। आशा है, हिन्दी भाषा भाषी इस से उपकृत होंगे।

आचार्य नरेन्द्र देव
कुलपति
काशी हिन्दू विश्वविद्यालय,
बनारस.

# ஹிந்தி முகவுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு.

**துணைவேந்தர்**
காசி பல்கலைக் கழகம்
25—3—52.

இந்தியாவில் ஒற்றுமையைப் பலப்படுத்த வெவ்வேறு மாகாணங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். இதன்பொருட்டு நாம் பரஸ்பரம் பிறர் மொழியையும் இலக்கியத்தையும் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும். நம் நாட்டின் மிகப் பழமையான மொழி தமிழ்; அதன் இலக்கியம் மிகச் சிறந்தது. வடஇந்திய மக்கள் தென்னாட்டு மொழிகளை அறிந்து அவற்றின் இலக்கியச் செல்வங்களில் சிறந்து விளங்கும் நூல்களின் இன்பத்தை நுகரவேண்டும். இந்நோக்கத்துடனேயே "குறள்" ஹிந்தியில் மொழிபெயர்க்கப்படுகிறது. இது வரவேற்கத் தகுந்த சிறந்ததோர் முயற்சியாகும். "குறள்" மிகப் பிரசித்திபெற்ற ஒரு சிறந்த தமிழ் நூல்; எல்லோராலும் போற்றக்கூடிய நூல். இது ஒரு துறவி இயற்றிய பொய்யா மொழி. இதில் அன்றாட நீதி வாக்கியங்கள் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. இந்நூல் மிகப் பயனுடையது. ஹிந்தி மொழி பேசும் மக்கள் இந்நூலால் பெரிதும் பயன் பெறுவர் என நம்புகிறேன்.

**ஆசார்ய நரேந்திர தேவ்**
*துணை வேந்தர்*
*காசி ஹிந்து பல்கலைக் கழகம்*
காசி.

# அறத்துப்பால்

## பாயிரவியல்

# 1. கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

பொருள்:— 1. முதற்று – முதலாகவுடையது. 2. வாலறிவன் – மெய்யுணர்வினை உடையான். 3. நிலமிசை—எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின் கண் (நிலத்தின் மேல் என்றும் பொருள் கூறுவர்.) 4. இடும்பை - பிறவித்துன்பம். 5. புரிந்தார் மாட்டு – விரும்பினாரிடத்து. 6. பொறி வாயில் ஐந்து – ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை. 8. அறவாழி – அறக் கடல்; பிற – பொருளும் இன்பமும். 9. பொறியில் – பொறிகள் போல; குணமில – பயன்படுதலுடையவல்ல.

# 2. வான் சிறப்பு

11. வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

14. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

16. விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

17. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

19. தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

பொருள்:– 11. வான் நின்று–மழையினாலே. 12. துப்பார்–உண்பார்; துப்பு (ஆக்கி) – உணவு; துப்புஆயதூஉம் – உணவாய் நிற்பதும். 13. விண் இன்று – மழை பெய்யாது; உடற்றும்–வருத்தும். 14. புயல்–மழை; வாரி – வருவாய்; வளம் – பயன். 17. நீர்மை – இயல்பு; குன்று – குறையும்; எழிலி – மேகம். 18. சிறப்பு – விழா.

## पहला परिच्छेद

# देव-स्तुति

(1) 'अ' वर्ण समग्र शब्दलोक का मूलकारण है। उसी प्रकार आदि भगवान् इस विश्व का आदिकारण है।

(2) यदि तुम उस सर्वज्ञ परमेश्वर के चरणों की आराधना नहीं करते हो, तो तुम्हारा यह सारा ज्ञान किस काम का ?

(3) जो मनुष्य, हृदय-कमल में रहनेवाले परमेश्वर के पवित्र चरणों की शरण लेते हैं; वे स्वर्ग में अनन्तकाल तक आनन्द प्राप्त करते हैं।

(4) जो मनुष्य, राग-द्वेष-रहित परमात्मा के चरणों में लवलीन रहते हैं, वे सब प्रकार के दुखों से मुक्त हो जाते हैं।

(5) जो मनुष्य परमात्मा के सदा गुण-गान करते हैं, उन्हें अपने चित्त की कलुषता से उत्पन्न शुभ और अशुभ कर्मों का फल नहीं भोगना पड़ता।

(6) वे मनुष्य, जिन्होंने पाँच इन्द्रियों को जीत लिया है और सत्य मार्ग का अनुसरण करते रहते हैं, सदा दीर्घजीवी होंगे।

(7) केवल वे ही मनुष्य, जो अद्वितीय परमात्मा के चरणों की शरण लेते हैं, सांसारिक चिन्ताओं से उन्मुक्त हो सकते हैं; अन्य नहीं।

(8) केवल वे ही मनुष्य, जो धर्म-सिन्धु परमेश्वर के चरणों की आराधना में तल्लीन रहते हैं, इस संसार-समुद्र को पार कर सकते हैं; दूसरे नहीं कर सकते।

(9) जो मनुष्य, अष्ट गुणों से शोभायमान परमात्मा के चरणों में अपना सिर नहीं झुकाता और न उनकी पूजा करता है, वह निश्चेतन इन्द्रिय के समान है।

(10) वे ही मनुष्य इस जन्म-मरण के समुद्र को पार कर सकते हैं जो भगवान् के श्रीचरणों में शरण आ जाते हैं; अन्य उसको पार नहीं कर सकते।

# दूसरा परिच्छेद

## मेघ-महिमा

(11) समय पर न चूकनेवाली वर्षा के कारण से ही पृथ्वी अपने अस्तित्व को कायम किये हुए है और इसी हेतु से लोग मेघ को जीवन की सुधा कहते हैं।

(12) समस्त स्वादिष्ठ भोजन के पदार्थ मनुष्य को वर्षा से ही प्राप्त होते हैं। यह मनुष्य के लिये पेय भी होती है।

(13) यदि वर्षा समय पर न हो तो चारों ओर समुद्र से घिरे हुए समस्त भूमण्डल पर अकाल फैल जावे।

(14) यदि बादलों का स्वाभाविक पानी बरसाना बंद हो जावे तो कृषक लोग खेत जोतना भी छोड़ दें।

(15) वर्षा से ही मनुष्य कष्ट पाते हैं और वर्षा होने से ही वे फिर हरे-भरे हो जाते हैं।

(16) यदि आकाश से वर्षा का होना बंद हो जावे तो घास के एक तिनके का भी उगना समाप्त हो जायगा।

(17) असीम समुद्र भी घटकर सूख जाय यदि बादल उससे स्वयं पानी ग्रहण कर पुनः जल बरसाना बन्द कर दें।

(18) यदि वर्षा का होना बन्द हो जावे तो न तो कोई देवताओं को प्रसन्न करने के लिये नित्य-कर्म होंगे और न उनके उपलक्ष्य में कोई नैमित्तिक कार्य ही किये जायेंगे।

(19) यदि वर्षा का आना रुक जावे तो इस विस्तृत भूमण्डल पर न तो कहीं दान दिया जायगा और न कोई तपस्या करेगा।

(20) जल के बिना पृथ्वी का अस्तित्व ही नहीं रह सकता अतः वर्षा के अभाव में मनुष्यों का सदाचरण चल नहीं सकता।

# 3. நீத்தார் பெருமை

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

24. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

27. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

30. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

பொருள்:— 21. பனுவல்—நூல்கள். 23. இருமைவகை—பிறப்பு வீடு என்னும் இரண்டினது கூறுபாடு; பிறங்கிற்று—உயர்ந்தது. 24. உரன்—அறிவு; தோட்டி – அங்குசம்; வரன்என்னும் வைப்பிற்கு – மோட்சம் என்னும் பூமிக்கு. 25. விசும்புளார்—தேவர்; கரி—சாட்சி. 26. அறிவான் கட்டே – அறிபவன் இடத்தில். 28. நிறை மொழி மாந்தர் – துறந்தார்; மறைமொழி—(அவர் ஆணையாற் சொல்லிய) மந்திரம். 30. அறவோர்—துறவறத்தில் நின்றவர்.

# 4. அறன்வலியுறுத்தல்

31. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு.

32. அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊஉங்கில்லை கேடு.

33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

34. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

35. அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.

36. அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

37. அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

38. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

39. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

40. செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி.

பொருள்:– 31. சிறப்பு–முத்தி; ஈனும்–தரும்; ஊஉங்கு (ஊங்கு)–மேல்; எவன் – யாது? 33. ஒல்லும் வகையான் – இயன்ற அளவு; ஓவாதே-இடைவிடாமல். 34. ஆதல்–ஆகுக; பிற-சொல்லும் வேடமும்; ஆகுலநீர–ஆரவாரத்தன்மை உடையன. 35. அழுக்காறு–பொறாமை; இழுக்கா – நீக்கி. 36. அன்று அறிவாம் – இறக்கும்பொழுது அல்லது செல்வம் உண்டானபோது செய்வோம்; பொன்றுங்கால் – இறக்கும் பொழுது; பொன்றா – அழியாத. 37. ஆறு – பயன். 38. வீழ்நாள் படாமை – இடைவிடாமல்; நன்று – அறம்; ஆற்றின் – செய்தால்; வாழ்நாள் வழி – பிறக்கும்நாள் வரும்வழி. 39. புறத்த – துன்பமாம். 40. ஓரும் என்பன இரண்டும் அசைநிலை.

## तीसरा परिच्छेद

# वैराग्य महिमा

(21) जो मनुष्य सत्य आचरण करते हैं और जिन्होंने सब कुछ त्यागकर तपस्या का मार्ग ग्रहण किया है, सब धर्म-शास्त्र उनकी गरिमा को सर्वोत्कृष्ट बतलाते हैं।

(22) जिस मनुष्य ने इस संसार का त्याग किया है, उसकी महिमा को नापना उतना ही दुष्कर है जितना कि मृत-पुरुषों की गणना करना।

(23) जो मनुष्य, जन्म और मुक्ति के भेद का परिज्ञान रखते हैं और जिन्होंने संसार त्याग कर वैराग्य धारण किया है, उन्हीं के गौरव से यह पृथ्वी शोभायमान है।

(24) जो मनुष्य दृढ़ता-पूर्वक अपनी पाँचो इन्द्रियों को वश में रखता है, वह स्वयं अनन्त सुख का कारण है और वही देवताओं के लोक में बोने योग्य बीज है।

(25) जिन मनुष्यों ने अपनी इन्द्रयों पर पूर्ण -विजय प्राप्त की है उनकी शक्ति का साक्षी, स्वर्गाधिपति इन्द्र स्वयं है।

(26) वे ही पुरुष महान् कहलाने के योग्य हैं जो असम्भव को सम्भव कर डालते हैं; निम्न पुरुष ऐसा कभी नहीं कर सकते।

(27) जिस मनुष्य ने स्पर्श, रस, गन्ध, रूप और शब्द —इन पांचो के स्वभाव को अच्छी तरह जान लिया है वही समस्त संसार का अधिपति हो सकता है।

(28) इस संसार में सब सत्यार्थ प्रतिपादक धर्मशास्त्र, महात्माओं के बड़प्पन का प्रतिपादन करते हैं।

(29) वे मनुष्य जो धर्म के कर्त्तव्यों के पहाड़ पर चढ़े हुए हैं, उनके क्रोध को एक क्षण के लिये भी सहना असम्भव है।

(30) यथार्थ में ब्राह्मण कहलाने के वे ही पात्र हैं जो धर्म-निष्ठ हैं और सब जीवों पर दयाभाव रखते हैं।

## चौथा परिच्छेद

# धर्म-महत्त्व

(31) क्या जीवन में धर्म से भी बढ़कर कोई वस्तु है? धर्म से मनुष्य को अभ्युदय मिलता है और निःश्रेयस की भी प्राप्ति होती है।

(32) धर्म से बढ़कर दूसरी कोई वस्तु नहीं; और धर्म को भूल जाने के समान कोई पाप नहीं।

(33) जीवन में जितने अवसर प्राप्त हों उनका पूर्ण लाभ उठाओ। अपनी पूर्ण शक्ति और योग्यता के साथ प्रत्येक अवसर पर धर्म करने से कभी न चूको।

(34) अपने मन को पवित्र बनाओ। धर्म का सार इसी में निहित है। इसके अतिरिक्त और सब केवल भड़कीला दिखावा है।

(35) तृष्णा, लोभ, क्रोध और अप्रिय-वचन—इनसे अलग रहना ही धर्म-प्राप्ति का मार्ग है।

(36) धर्म करना कभी न टालो। इसको अविलम्ब से करो; क्योंकि संसार में धर्म ही एक वस्तु है जो तुम्हारी मृत्यु के समय अचूक मित्र सिद्ध होगी।

(37) धर्म के फल की प्राप्ति की क्यों इच्छा करते हो? केवल एक बार पालकी उठानेवाले कहारों पर दृष्टि डालो और उनको भी देख लो जो पालकी पर सवार होकर चलते हैं।

(38) यदि प्रतिदिन तुम धर्म करते रहते हो तो यह तुम्हारा धर्म करने का अभ्यास तुम्हारे पुनर्जन्म को रोकनेवाले मार्ग में एक बड़े पत्थर का काम करेगा।

(39) धर्म से ही सुख उत्पन्न होता है। इसके अतिरिक्त वस्तुएँ तो केवल दुख पैदा करनेवाली हैं; उनसे जीवन में कोई सुषमा पैदा नहीं होती।

(40) हमारे जीवन का केवल एक नियम होना चाहिये—धर्माचरण करना और पापकर्मों से बचना।

[stamp]

# 5. இல்வாழ்க்கை

41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை.

44. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை.

48. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

49. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பொருள்;— 41. மூவர் – பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, 42. துவ்வாதவர் – ஏழைகள், 43. தென்புலத்தார் – பிதிரர்; ஒக்கல் – சுற்றத்தார்; தலை – சிறப்புடைய அறம். 44. பாத்து–பகுத்து; ஊண்– உண்ணுதல்; வழி – சந்ததி; எஞ்சல் – குறைபட்டு ஒழிதல். 46. ஆற்றின் – செலுத்தினால்; புறத்தாறு – தவநெறி; (போஒய் – போய்), எவன் – யாது. 47. முயல்வார்–புலன்களை விட முயல்பவர். 48. ஆற்றின் ஒழுக்கி – தவம் செய்வாரைத் தத்தம் நெறியிலே ஒழுகுமாறு செய்து. 49. அஃது – துறவறம்; பிறன்பழிப்பது – கூடாவொழுக்கம்.

# 6. வாழ்க்கைத்துணை நலம்

51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.

54. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

57. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

58. பெற்றான் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

59. புகழ்புரிந் தில்இலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

60. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

பொருள்:- 51. மாண்பு-நற்குண நற்செய்கைகள்; தற்கொண்டான்-கணவன்; வளத்தக்காள் – வருவாய்க்குத் தக்க செலவினையுடையவள். 54. பெருந்தக்க – மேம்பட்ட பொருள். 55. கொழுநன் – கணவன். 56. தகைசான்ற சொல்–நன்மையமைந்த புகழ். 57. எவன் செய்யும்–என்ன பயனைச் செய்யும்; நிறை–நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல். 58. பெற்றான் பெறின்–கணவனை வழிபடின். 59. புகழ் புரிந்த இல் – புகழை விரும்பிய மனைவி; ஏறு – ஆண்சிங்கம்; பீடு – பெருமிதம்.

[library stamp]

## प्रथम भाग—गृहस्थधर्म

## पांचवां परिच्छेद

# गृहस्थ-जीवन

(41) गृहस्थ आश्रम में रहनेवाला मनुष्य, अपने अपने धर्मों में रहनेवाले अन्य तीनों आश्रमों का मुख्य आधार है।

(42) गृहस्थ मनुष्य मुनियों और तपस्वियों का मूलाश्रय, निर्धनों का सहायक और आश्रय-रहित मृत पुरुषों का सहारा है।

(43) गृहस्थ पुरुष के मुख्य पांच कर्तव्य हैं :— (१) मृतकों का श्राद्ध करना, (२) देवताओं को बलि चढ़ाना, (३) अतिथियों का सत्कार करना, (४) सम्बन्धियों की सहायता करना और (५) आत्मोत्थान करना।

(44) जो मनुष्य बदनामी से भय खाता है तथा दूसरों को आहार दान देकर पश्चात् स्वयं भोजन करता है—उसका वंश-बीज कभी नष्ट नहीं होता।

(45) जो गृहस्थ प्रेमपूर्वक जीवन व्यतीत करता है तथा जिसका आचरण सत्य है—उसी का जीवन धर्ममय है और वह सब धर्म के फलों को प्राप्त करता है।

(46) यदि मनुष्य गृहस्थ-धर्म का पूर्ण रूप से पालन करता है तो उसे अन्य आश्रमों के धर्मों को पालन करने की कोई आवश्यकता नहीं।

(47) मोक्ष की प्राप्ति की इच्छा रखनेवाले मुनियों से धर्म के अनुकूल गृहस्थाश्रम पालन करनेवाले मनुष्य का जीवन उत्कृष्टतर है।

(48) जो गृहस्थ दूसरे मनुष्यों को सत्य-मार्ग पर स्थिर रखता है और स्वयं धार्मिक जीवन से विरत नहीं होता, वह तपस्वियों से भी अधिक तपस्वी है।

(49) गृहस्थ-धर्म को छोड़कर धर्म ही क्या है? आचरण की बदनामी से मुक्त गृहस्थ जीवन से बढ़कर अन्य कोई जीवन नहीं है।

(50) जो मनुष्य इस पृथ्वी पर सद्-गृहस्थ का पूर्णाचरण कर जीवन व्यतीत करता है वह स्वर्ग में देवता का स्थान प्राप्त करेगा।

## छठा परिच्छेद

# धर्मपत्नी का लाभ

(51) वही सच्ची जीवनसंगिनी कहलाती है जिसके अन्दर समग्र धर्मपत्नी के गुण विद्यमान हैं और जो अपने पति की आमदनी से अधिक खर्च नहीं करती।

(52) यदि गृहस्थ-जीवनमें धर्म-पत्नी धार्मिक गुणोंसे रहित हो तो सर्व प्रकार की श्रेष्ठ वस्तुओं के रहने पर भी गृहस्थ-जीवन निरर्थक है।

(53) यदि किसी मनुष्य की स्त्री में सब धार्मिक गुण विद्यमान हैं तो उसके घर में किस वस्तु की कमी है? यदि इनकी कमी है तो सब वस्तुओं की कमी है।

(54) यदि कोई स्त्री सतीत्व का गढ़ है तो क्या संसार में उससे बढ़कर कोई वस्तु हो सकती है?

(55) प्रातः शय्या से उठकर जो स्त्री अपने पति की पूजा करती है और अन्य देवताओं की पूजा नहीं करती, निश्चय ही जल से भरे हुए बादल भी उसकी आज्ञानुसार ही बरसेंगे।

(56) वही उत्तम सहधर्मिणी है जो मर्यादा में रहती है, अपने पति की श्रद्धापूर्वक सेवा करती है, अपने धर्म की रक्षा करती है और गृहसम्बन्धी परिश्रम से कभी घबराती नहीं।

(57) घर की चारदीवारी के अन्दर पर्दे में रहने से क्या लाभ? स्त्री के सतीत्व से बढ़कर संसार में और कोई पर्दा नहीं हो सकता।

(58) कर्तव्यशीला धर्म-पत्नी, तमाम स्वर्ग के गौरव और सुख के साथ, उसको प्राप्त करने के लिये अधिकारिणी बन जाती है।

(59) व्यभिचारिणी स्त्री का पति, अपने विरोधियों के सामने कभी भी गर्व से मस्तिष्क ऊँचा करके सिंह के समान सुन्दर गति से गमन नहीं कर सकता।

(60) स्त्री का धर्म-पूर्वक जीवन बिताना ही गृह की शोभा है और उसकी सुयोग्य सन्तान ही गृह के अलंकार हैं।

# 7. புதல்வரைப்பெறுதல்

61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

63. தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

64. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

65. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு.

66. குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

67. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

68. தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

70. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

பொருள் :— 62. தியவை – துன்பம், பழி பிறங்கா – பிறரால் பழிக்கப்படாத. 67 முந்தி யிருப்பச் செயல்–மிக்கு இருக்குமாறு கல்வி உடையன் ஆக்குதல். 69 உவக்கும்–மகிழும், சான்றோன்–கல்வி கேள்விகளில் நிறைந்தவன். 70. சொல் – சொல்லை நிகழ்த்துதலை.

# 8. அன்புடைமை

71. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

73. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

74. அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு.

76. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

78. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

79. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

80. அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

**பொருள் :–** 71. ஆர்வலர்–அன்புடையவர், பூசல்தரும்–(அன்பினை) எல்லாரும் அறிய வெளிப்படுத்தும். 73. என்போடு இயைந்த வழக்கு–உடம்போடு உண்டாகிய தொடர்ச்சி. 74. ஆர்வம் – விருப்பம், ஈனும்–தரும். 76. சார்பு – துணை, அஃது – அன்பு. 77. என்பு இலதனை – உடம்பை, அன்பு இலதனை–அன்பு இல்லாத உயிரை. 78. வன்பால்–வலியநிலம், வற்றல் மரம் – உலர்ந்த மரம்.

## सातवां परिच्छेद

# सन्तति

(61) बुद्धिमान् सन्तान को पैदा करने से बढ़कर दूसरी नियामत हम नहीं जानते।

(62) वह मनुष्य धन्य है जिसके बच्चों का चाल-चलन उत्तम और निष्कलंक है। सात जन्मों तक उसे कोई बुराई छू न सकेगी।

(63) मनुष्य की सच्ची सम्पत्ति उसके बालबच्चे हैं। उनकी प्राप्ति उसके कर्मों के फल हैं।

(64) निस्संदेह, अमृत से भी बढ़कर वह साधारण रस (एक प्रकार का भोजन) है जिसको अपने ही बच्चों के कोमल हाथों ने घँघोलकर रक्खा है।

(65) शरीर का आनन्द अपने बच्चों का स्पर्श है। उनकी मधुर बोली को सुनना कानों का सुख है।

(66) 'वंशी की ध्वनि मधुर होती है', 'वीणा का स्वर प्यारा होता है' इस प्रकार वही लोग कह सकते हैं जिन्होंने अपने बच्चों की तुतलाती हुई बोली नहीं सुनी है।

(67) पिता अपने पुत्र के प्रति यही भलाई कर सकता है कि वह उसे सभा के मध्य प्रथम पंक्ति में बैठने योग्य बना दे।

(68) बालक का बुद्धिमान् होना केवल पिता को ही सुखकर नहीं होता अपितु वह सारे विश्व को आनन्दाश्रय होता है।

(69) माता के आनन्द की कोई सीमा नहीं रहती जब वह बच्चे को जन्म देती है किन्तु उससे भी बढ़कर आनन्द उसे तब प्राप्त होता है जब वह अपने पुत्र के गुणगान अन्य लोगों के मुख से सुनती है।

(70) पिता के प्रति पुत्र की सबसे बड़ी यही सेवा है कि संसार के लोग आकर उससे पूछें कि आपने किस पुण्य के फलस्वरूप ऐसे पुत्ररत्नको प्राप्त किया है।

# आठवां परिच्छेद

## प्रेम

(71) क्या ऐसी कोई अर्गला है जो प्रेम के दरवाजे को बन्द कर दे? अपने प्रेमियों के दुःख की समवेदना में बहते हुए आँसू अपने आप हृदय में प्रेम के अस्तित्व की घोषणा कर देंगे।

(72) जिनका हृदय प्रेम से शून्य होता है वे अपने लिये ही जीते हैं; किन्तु जो प्रेमी होते हैं वे अन्य पुरुषों के लिये अपने जीवन तक का उत्सर्ग कर देते हैं।

(73) कहते हैं कि आत्मा का बार-बार जन्म लेना प्रेम के आनन्द लेने के लिये ही होता है।

(74) प्रेम से ही दया का स्रोत बहता है और यह दया-भाव ही किसी समय मित्रतारूपी बहुमूल्य रत्न के रूप में उत्पन्न होता है।

(75) स्वर्गीय आनन्द, प्रेम से अनुविद्ध केवल धार्मिक जीवन का फल मात्र ही तो है।

(76) अज्ञानी पुरुष कहते हैं कि दया धर्म का साथी है। नहीं, यह बुराई के विरुद्ध एक बड़ा भारी परित्राण भी है।

(77) अस्थि-हीन शरीर को सूर्य सुखा डालता है। उसी प्रकार धर्म का देवता उसे नष्ट कर डालता है जो प्रेम नहीं करता।

(78) जो मनुष्य प्रेम करना नहीं जानता, उसका जीवन, मरु-भूमि के सूखे हुए वृक्ष के ठुण्ठ में कोंपल आने के समान है।

(79) उस बाहरी सौन्दर्य का कोई लाभ नहीं यदि प्रेम, जो आत्मा का आभूषण है, हृदय में न हो।

(80) जिस शरीर में प्रेम का वास है उसे जीवन का आधार कहते हैं। जिसमें प्रेम नहीं वह केवल मांस से घिरी हुई हड्डियों का ढांचा है।

# 9. விருந்தோம்பல்

81. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

84. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்.

85. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

90. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

**பொருள் :–** 81. ஓம்பி – போற்றி; வேளாண்மை – உபகாரம். 82. சாவாமருந்து – அமிர்தம். 83. வைகலும் – ஒவ்வொருநாளும்; பருவந்து – வருந்தி; இன்று – இல்லை. 84. செய்யாள் – திருமகள்; அகன்அமர்ந்து – மனம்மகிழ்ந்து. 85. மிச்சில் – எஞ்சியஉணவு; மிசைவான் – உண்பவன். 86. செல்விருந்து – விருந்தாய் வந்தவர்; வருவிருந்து – விருந்தாய் வருபவர். 87. இனைத்துணைத்து – இன்ன அளவினையுடையது; (துணை – அளவு); வேள்வி – விருந்தோம்பல். 88. பரிந்து ஓம்பி - வருந்திக் காத்து; பற்று - ஊன் றுகோல்; வேள்வி- வேளாண்மை. 89. மடவார் – அறிவிலார். 90. அனிச்சம் – ஒருமலர்.

# 10. இனியவைகூறல்

91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

92. அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

93. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே யறம்.

94. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

95. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்
கணியல்ல மற்றுப் பிற.

96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

97. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்.

99. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

100. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

**பொருள்** :- **91.** ஈரம் அளைஇ – அன்போடு கலந்து; படிறு – வஞ்சனை; செம்பொருள் – அறம். **94.** துன்பு உறூஉம் – துன்பத்தை மிகுவிக்கும்; துவ்வாமை – வறுமை. **95.** மற்று – அசைநிலை; பிற – பிற அணிகள். **96.** அல்லவை – அறம் அல்லாதவை, பாவம். **97.** நயன் – நீதி; நன்றி – அறம்; பயன் – நன்மை; தலைப்பிரியா – நீங்காத. **98.** சிறுமை – துன்பம், குற்றம்.

# नवां परिच्छेद

## आतिथ्य

(81) गृहस्थ-बनना और धन-कमाना केवल इसलिये होता है कि हम अतिथियों और यात्रियों की भोजनादिक से सेवा करें।

(82) जब अतिथि घर में प्रतीक्षा कर रहा है तब हमें, चाहे अमृत ही क्यों न हो, अकेले पीना उचित नहीं।

(83) उस मनुष्य का जीवन, जो घर आए हुए अतिथि का सत्कार करने में नहीं चूकता, कभी भी दरिद्रता से दुःखी नहीं होगा।

(84) लक्ष्मी उस मनुष्य पर सदा प्रसन्न रहती हैं, जो प्रसन्नता-पूर्वक सुपात्र अतिथि के सत्कार के लिये सदा उद्यत रहता है।

(85) क्या उस मनुष्य के खेत को बोने की आवश्यकता है जो सर्वदा अपने अतिथि को भोजन खिलाने के पश्चात् ही जो कुछ बचता है उससे अपनी उदरपूर्ति करता है ?

(86) जो मनुष्य आये हुए अतिथि की सेवा करता है और आने वाले की प्रतीक्षा करता है, वह स्वयं देवताओं का भी आदरणीय अतिथि बनता है।

(87) अतिथि-सत्कार के पुण्य के फल का कोई भी मनुष्य पूरा माप नहीं कर सकता। उसकी महत्ता का माप अतिथि की योग्यता पर ही निर्भर रहता है।

(88) वे मनुष्य जो अतिथि-सत्कार के कर्तव्य को नहीं पालते, उन्हें एक दिन पश्चात्ताप करके कहना पड़ता है—'हमने इतना धन संचय करके केवल मूर्खता ही की'।

(89) विपुल धन और वैभव के होते हुए भी जो मनुष्य अतिथि सेवा नहीं करता वह यथार्थ में दरिद्र है। ऐसा केवल अज्ञानी ही कर सकते हैं।

(90) अनीचा का पुष्प सूँघने मात्र से मुरझा जाता है किन्तु अतिथि के दिल को मुरझाने के लिये अप्रसन्नता पूर्ण दृष्टि ही पर्याप्त है।

# दसवां परिच्छेद

## मधुर-भाषण

(91) जो मनुष्य निश्छल प्रेम और सत्य से परि-पूर्ण होते हैं; उनके मुख से निकली हुई वाणी ही यथार्थ में मधुर होती है।

(92) माधुर्य से भरी हुई दृष्टि के साथ वचन बोलना, औदार्य-पूर्ण हृदय के साथ दान देने से बढ़कर है।

(93) स्नेहमयी-दृष्टि और मधुर-वाणी से किसी व्यक्ति का स्वागत करना सच्चा धर्म पालन है।

(94) जो मनुष्य सर्वदा प्रत्येक व्यक्ति के साथ आल्हाद पूर्वक वार्तालाप करता है उसके पास दुःखों को बढ़ाने वाली दरिद्रता कभी नहीं आती।

(95) नम्रता और प्रेममयी वाणी—केवल यही मनुष्य के सच्चे आभूषण हैं; अन्य कोई नहीं।

(96) उन मनुष्यों के अन्दर से पाप नष्ट हो जाते हैं और उनके अन्दर धर्म की अभिवृद्धि होती है जो दयार्द्र और हितकर वाणी बोलते हैं।

(97) माधुर्य से भरे हुए उच्चारित वचन, जिन से दूसरे मनुष्यों का हित होता है, अवश्य ही धर्म के मार्ग को उज्वलित करते हैं।

(98) मधुर और पीड़ा न पहुँचाने वाले शब्द बोलने से मनुष्य को इस लोक में भी सुख प्राप्त होता है और परलोक में भी सुख मिलता है!

(99) मनुष्य को श्रुति-कटु शब्दों का क्यों व्यवहार करना चाहिये जब वह जानता है कि माधुर्यपूर्ण आनन्द मिष्ट वाणी के प्रयोग में ही है?

(100) मधुर वाणी के रहते हुए भी जो मनुष्य कटुवाणी का व्यवहार करता है वह यथार्थ में पक्व मधुर फल को छोड़कर कच्चा फल खाना पसंद करता है।

# 11. செய்ந்நன்றியறிதல்

101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

102. காலத்தி னல்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

105. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பொருள் :- 101. வையகம் – நிலவுலகம்; ஆற்றல் – ஒத்தல். 102. காலத்தினால் – உதவி வேண்டும்காலத்து; ஞாலம் – நிலவுலகம்; மாணப்பெரிது – மிகப்பெரிது. 103. தூக்கார் – ஆராயாமல். 104. துணை – அளவு. 105. வரைத்துஅன்று – அளவன்று; சால்பு – தகுதி. 106. மறவற்க – விடாதே; கேண்மை – நட்பு; துப்பு – ஊன்றுகோல், வலி; ஆயார் – ஆனவர். 107. உள்ளுவர் – நினைப்பர்; விழுமம் – துன்பம்; (விழும்அம் – விழும்கண்ணீர்) 108. நன்றல்லது– தீமை.

# 12. நடுவுநிலைமை

111. தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்.

112. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

113. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

114. தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

116. கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

117. கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொரு [பால்
கோடாமை சான்றோர்க் கணி.

119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

பொருள் :- 111. தகுதி – நடுவுநிலைமை; பகுதியால் – பகை நொதுமல் நட்பு என்னும் பகுதிதோறும்; (பாற்பட்டு – நடுவுநிலைமை தவறாது). 112. செப்பம் – நடுவுநிலைமை; ஆக்கம் – செல்வம்; எச்சம்– சந்ததி; ஏமாப்பு – வலிமை, காவல். 113. நடுவுஇகந்துஆம் – நடுவு நீங்குவதால் உண்டாகிற; விடல் – விடுக. 114. தக்கார் – நடுவுநிலைமை யுடையவர்; எச்சம் – மக்கள். 115. இல்லல்ல – உண்டு. 116. ஒரீஇ– நீங்கி. 117. கெடு – கேடு, வறுமை; உலகம் வையாது – உயர்ந்தோர் கருதார்; தாழ்வு – வறுமை. 118. கோல் – துலாக்கோல்; அணி – அழகு. 119. செப்பம் – நடுவுநிலைமை; ஒருதலையா – உறுதியாக. 120. பிறவும் தமபோல் செய்தலாவது கொள்வது மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல் செய்தல்.

[library stamp]

## ग्यारहवां परिच्छेद

# कृतज्ञता

(101) अहसान की भावना से रहित होकर जो दूसरों के प्रति दया दिखलाई जाती है उसका बदला स्वर्ग और मर्त्य दोनों मिल कर भी नहीं चुका सकते।

(102) आवश्यकता के समय जो सहायता की जाती है चाहे वह अल्प ही क्यों न हो किन्तु उसका भार सारे संसार से बढ़ कर है।

(103) बदले के विचार को छोड़कर जो अन्य की सहायता की जाती है उसका विस्तार समुद्र से भी बढ़कर है।

(104) किसी के द्वारा किया हुआ उपकार राई के समान ही क्यों न हो किन्तु समझदार मनुष्य के हृदय में उसका मूल्य खजूर के फल से अधिक होता है।

(105) किसी पर कृपा करने का मूल्य बदले में नहीं आँका जा सकता, उसका मूल्य उपकृत व्यक्ति की कृतज्ञता पर ही निर्भर होता है।

(106) पवित्र आत्माओं की संगति की अवहेलना न करो। न उन लोगों की मित्रता का परित्याग करो जिन्होंने मुसीबत के समय तुम्हारी सहायता की है।

(107) नेक पुरुष, कृतज्ञता के साथ सात जन्म तक उन पुरुषों की याद रखते हैं जिन्होंने उनको कष्ट से उबारा है।

(108) किये गये उपकार को भूलना उचित नहीं; किन्तु यदि कोई भलाई के स्थान में बुराई करे तो उसको तुरन्त भूल जाना मानवता का चिह्न है।

(109) यदि किसी ने भयंकर हानि पहुँचाई है तो मनुष्य उस भयङ्कर हानि को उसके द्वारा किये हुए एक भी उपकार के स्मरण आने पर सर्वथा भूल जाता है।

(110) अन्य किसी पाप को करने पर मनुष्य का उद्धार हो सकता है किन्तु कृतघ्नता के पाप को करने पर मनुष्य का किसी प्रकार उद्धार नहीं हो सकता।

## बारहवां परिच्छेद

# न्याय-निष्ठा

(111) न्याय-निष्ठता, जो पक्षपात रहित होती है, स्वयं एक बहुत बड़ा अद्भुत गुण है; और कुछ नहीं।

(112) न्याय-निष्ठ पुरुष की सम्पत्ति कभी नहीं घटती। बल्कि पीढ़ी दर पीढ़ी तक चलती-चली जाती है।

(113) अन्यायोपार्जित धन का परित्याग कर दो। भले ही इससे समुन्नति ही की क्यों न सम्भावना हो।

(114) न्यायी और अन्यायी का परिचय उसकी सन्तति से मालूम हो जाता है।

(115) न्याय-निष्ठ पुरुषों का गौरव इसी में है कि वे अभ्युदय की परवा न करते हुए सदा अपने हाथों में न्याय की तुला धारण करते हैं।

(116) जब मनुष्य का चित्त न्याय को छोड़कर अन्याय की ओर झुक जाता है तब उसका विनाश अवश्यंभावी होता है।

(117) संसार के लोग न्यायनिष्ठ मनुष्य की दरिद्रता को कभी भी हेय दृष्टि से नहीं देखते।

(118) समझदार मनुष्यों का गौरव इसी में है कि वे अपने को समपक्ष तराजू की डंडी के समान कभी भी इधर-उधर नहीं झुकने देते।

(119) निष्पक्ष चित्त वाले मनुष्य के मुख से निकले हुए सत्य वचन ही न्याय-पूर्ण होते हैं।

(120) व्यापारियों का यही सत्य व्यापार है कि वे अन्य की वस्तुओं को अपनी वस्तुओं के समान समझकर उनसे व्यवहार करें।

# 13. அடக்கமுடைமை

121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

122. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்.

124. நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

125. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

127. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

129. தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

130. கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

பொருள்:– 121. இருள்-நரகம். 122. ஊங்கு-மேல். 123. செறிவு-அடக்கம், அறிந்து – நல்லோரால் அறியப்பட்டு, சீர்மை – நன்மை. 125. செல்வந்தகைத்து – வேறொரு செல்வமாம் சிறப்பினையுடையது. 126. ஒருமை–ஒரு பிறப்பு, எழுமை – ஏழுபிறப்பு, ஏமாப்புடைத்து–காவல் ஆதலையுடையது (துன்பம் இல்லையாம்). 127. யா – எல்லாவற்றையும், சோகாப்பர்–துன்பம் அடைவர். 128. தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் — தீச்சொல்லின் பொருளைப் பயக்குமாயின். 129. கதம் – கோபம், செவ்வி – தன்குறை கூறுதற்கு ஏற்ற மனம் மொழி முகங்கள் இனியனாங்காலம்.

# 14. ஒழுக்கமுடைமை

131. ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

132. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

133. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

134. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

135. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

139. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

140. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

**பொருள் :–** 131. விழுப்பம் – சிறப்பு. 132. பரிந்து — வருந்தி. 133. குடிமை — குலனுடைமை, (குடிப்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கம்), இழுக்கம்–(ஒழுக்கத்தில்) தவறுதல். 134. ஓத்து–வேதம். 135. அழுக்காறு – பொறாமை. 136. ஒல்கார் – சுருங்கார், நீங்கார், உரவோர் – மனவலியுடையோர், அறிவுடையோர். 138. இடும்பை — துன்பம். 139. ஒல்லாவே – முடியாது, வழுக்கியும் – மறந்தும். 140. ஒட்ட – பொருந்த.

# तेरहवां परिच्छेद

## आत्म-संयम

(121) आत्म-संयम से देवत्व प्राप्त होता है। किन्तु असंयत इन्द्रियलालसा मनुष्यको रौरव नरक को प्राप्त कराती है।

(122) आत्म-संयम के बराबर अन्य कोई सम्पत्ति नहीं, अतः इसकी अपने खज़ाने के समान सुरक्षा करो।

(123) यदि मनुष्य आत्म-संयम के मूल्य को जानता है और उसको जान कर आत्म-संयम धारण करता है तो वह अवश्य यशस्वी होगा।

(124) जो मनुष्य आत्म-संयम को धारण करता है उस मनुष्य की महत्ता पहाड़ों से भी बढ़कर होती है।

(125) नम्रता से सब मनुष्य शोभायमान होते हैं किन्तु यह पूर्ण गौरव के साथ श्रीमानों में चमकती है।

(126) जो मनुष्य अपनी इन्द्रियों को उसी प्रकार संयमित रहता है जैसे कछुआ अपने हाथ-पैरों को सिकोड़ कर रखता है उस मनुष्य की सात जन्म तक रक्षा होगी।

(127) तुम अन्य इन्द्रियों को वश में न रक्खो किन्तु अपनी ज़बान अवश्य वश में रक्खो जिससे तुम्हें अपने अयुक्त शब्दों के प्रयोग के लिये न पछताना पड़े।

(128) यदि तुम्हारे दुष्ट शब्द से अन्य पुरुष को पीड़ा पहुँचती है तो तुम्हारे सब पुण्य-कर्मों का फल नष्ट हो जायगा।

(129) आग से जला हुआ घाव तो समय पाकर अच्छा हो जाता है किन्तु बद ज़बान से पैदा हुआ घाव कभी अच्छा नहीं होता।

(130) जो मनुष्य क्रोध को वशमें करके ज्ञानपूर्वक आत्म-संयम धारण करता है उसके दर्शन के लिये धर्म का देवता भी उसके स्थान की खोज करता है।

## चौदहवां परिच्छेद

# सदाचरण

(131) श्रेष्ठ और पवित्र आचरणवाले मनुष्य का सब आदर करते हैं। अतः सदाचार का मूल्य प्राणों से भी अधिक समझना चाहिये।

(132) सदाचरण के मार्ग पर चलने के लिये अत्यन्त प्रयत्नशील रहना चाहिये। सदाचरण से बढ़कर और कोई मित्र नहीं हो सकता।

(133) सदाचरण से मनुष्य के वंश की प्रतिष्ठा होती है। दुराचरण से मनुष्य दूसरों की दृष्टि में गिरजाता है।

(134) एक ब्राह्मण वेदों को भूलने पर पुनः स्मरण कर सकता है किन्तु सदाचरण से एक बार भी गिरने पर उसका पुनः उत्थान नहीं हो सकता।

(135) ईर्षालु कभी समुन्नति प्राप्त नहीं कर सकता। उसी प्रकार जो मनुष्य सन्मार्ग से च्युत हो जाता है वह कदापि उन्नति नहीं कर सकता।

(136) दृढ़-प्रतिज्ञा वाला मनुष्य सदाचार से कभी भी भ्रष्ट नहीं होगा क्योंकि वह जानता है कि सदाचार से गिरना अनेक आपत्तियों का स्थान है।

(137) सच्चरित्र मनुष्य सारी मनुष्य जाति के आदर का भाजन होता है। दुश्चरित्र मनुष्य को सर्वत्र निरादर ही प्राप्त होता है।

(138) सदाचरण आनन्द का स्रोत गिना जाता है। किन्तु पापाचरण हमेशा दुःख ही दुःख पैदा करता है।

(139) सच्चरित्र मनुष्य भूल करके भी किसी के लिये अपशब्द प्रयोग नहीं करता।

(140) जो मनुष्य सदाचारपूर्ण विश्व का साथ नहीं दे सकते वे पठित मूर्ख कहलाते हैं।

# 15. பிறனில்விழையாமை

141. பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
அறம்பொருள் கண்டார்கண் இல்.

142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்தொழுகு வார்.

144. எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.

145. எளிதென இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

146. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்.

147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

149. நலக்குரியார் யார்எனின் நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.

150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

**பொருள் :–** 141. பொருளாள் – மனைவி (யை), பெட்டு–விரும்பி. 142. அறன் கடைநின்றார் — காமம் காரணமாகப் பாவத்தின்கண் நின்றார். 143. விளிந்தார் – செத்தார், மன்ற–மெய்யாக. தெளிந்தார் இல்–ஐயுறுதார் மனைவியிடத்து; புரிந்து–விரும்பி. 146. இகவாவாம்–நீங்கா. 147. பிறன் இயலாள்–பிறன் மனைவி. 148. ஆன்ற–நிரம்பிய. 149. நலக்குரியார் – நன்மைகள் அடைவதற்குரியவர், நாமநீர்வைப்பு – அச்சம்தரும் கடல்சூழ்ந்த உலகம். 150. அல்ல – பாவங்கள், பிறன் வரையாள் – பிறன் மனைவி.

# 16. பொறையுடைமை

151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

152. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

153. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

154. நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறை
போற்றி ஒழுகப் படும். [உடைமை

155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

156. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

157. திறன்அல்ல தன்பிறர் செய்யினும் நோநொந்
தறன்அல்ல செய்யாமை நன்று.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

159. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

பொருள் ;— 152. பொறுத்தல் – பொறுப்பாயாக, இறப்பினை – பிறர்செய்த மிகையை, (மிகை – குற்றம்). 153. ஒரால் – நீக்குதல், மடவார்ப்பொறை–மிகைசெய்தாரைப் பொறுத்தல். 156. ஒறுத்தார்– துன்பம் செய்தார், பொன்றும் துணையும்–(உலகம்) அழியும் அளவும். 157. திறனல்ல–செய்யத்தகாதவை; தன் – தன்இடத்து; நோநொந்து– (அவர்க்குவரும்) துன்பத்திற்கு நொந்து. 158. மிகுதி – மனச்செருக்கு; மிக்கவை – தீயவை; தகுதி – பொறுமை. 159. இறந்தார் – நெறியைக் கடந்தார்; நோற்கிற்பவர் – பொறுப்பவர். 160. நோற்பார் – (உற்ற நோய்) பொறுப்பவர்.

## पन्द्रहवां परिच्छेद

# परदारेच्छा

(141) जो मनुष्य धन और धर्म में दृढ़ रहते हैं वे पर-स्त्री को चाहने की मूर्खता कभी नहीं करते।

(142) वे मनुष्य जो अधर्म के मार्ग का अनुसरण करते हैं उनमें सबसे अधिक मूर्ख वे हैं जो अन्य स्त्रियों की ड्योढ़ी पर खड़े रहकर उनकी प्रतीक्षा करते हैं।

(143) निस्संदेह वे मनुष्य मृततुल्य हैं जो विश्वस्त मित्रों की धर्म-पत्नियों पर बुरी निगाह डालते हैं और उनके शील पर आक्रमण करते हैं।

(144) उस बड़प्पन से क्या प्रयोजन? यदि मनुष्य बड़ा होकर व्यभिचार से पैदा होने वाले परिणामों की परवा न करते हुए पर-स्त्री-सेवन में रत होता है।

(145) जो मनुष्य पर-स्त्री-गमन में पड़ जाता है और समझता है कि यह तो मामूली बात है, वह सदा के लिये अपने मुख पर कलंक का टीका लगाता है।

(146) जो मनुष्य पर-स्त्री की आकांक्षा रखता है उसको चार बुराइयाँ—शत्रुता, पाप, भय और अपकीर्ति—कभी नहीं छोड़तीं।

(147) सद्‌गृहस्थ कहलाने का पात्र वही है जो परस्त्री को कभी भी बुरी निगाह से नहीं देखता।

(148) धन्य है उस वीर पुरुष को जो पराई स्त्री पर कभी स्नेह की दृष्टि नहीं डालता। यह बुद्धिमान् मनुष्य के लिये केवल धर्म ही नहीं है अपितु जीवन के अस्तित्व का यह एक महान नियम है।

(149) जो मनुष्य पर-स्त्री की भुजाओं का आलिंगन नहीं करता, वह यथार्थ में समुद्र से परिवेष्ठित इस पृथ्वी पर सब गुणों का अधिकारी सत्पुरुष है।

(150) चाहे मनुष्य अन्य पापों का अपराधी बन जाय किन्तु मनुष्य को पर-स्त्री के व्यभिचार के पाप का भागी नहीं बनना चाहिये।

# सोलहवां परिच्छेद

## क्षमा

(151) पृथ्वी उनका भी पालन करती है जो उसे खोदते हैं। इसी प्रकार जो तुम्हें कष्ट पहुँचाते हैं उनकी बातों को सहन करो। क्योंकि महान धर्म यही है।

(152) अन्य पुरुषों के अपराधों को क्षमा करो। दूसरों के द्वारा किये हुए अपराधों को भूल जाना क्षमा से भी उत्तम है।

(153) अतिथियों का सत्कार न करना दरिद्रता की चरम सीमा है। किन्तु मूर्खों की बातों को सहना परम गौरव की बात है।

(154) यदि तुम अपने चारित्र की रक्षा करना चाहते हो तो तुम्हारा चरित्र क्षमाशील होना चाहिये।

(155) 'संसार के लोग बदला लेनेवाले का कभी सत्कार नहीं करते परन्तु क्षमाशील पुरुष का मूल्य वे सुवर्ण से भी अधिक आँकते हैं।

(156) बदला लेने वाले का आनन्द केवल एक दिन के लिये होता है किन्तु क्षमाशील व्यक्ति का आनन्द पृथ्वी के अन्त तक रहता है।

(157) हानि चाहे कितनी ही बड़ी क्यों न हो उसकी चिन्ता न करो। गौरव इसी में है कि दूसरों के द्वारा किये हुए अपराधों को सदय होकर क्षमा कर दो।

(158) उन मनुष्यों को क्षमा से जीतो जिन्होंने घमंड में आकर तुम्हें हानि पहुँचाई है।

(159) वह मनुष्य साधु से भी बढ़कर है जो अपनी निन्दा करनेवालों के भी वचन सह लेता है।

(160) ऐसे मनुष्य महान् हैं जो उपवास पूर्वक तपस्या करते हैं किन्तु इनसे भी बढ़कर वे मनुष्य हैं जो तिरस्कार करने वाले को क्षमा कर देते हैं।

# 17. அழுக்காறாமை

161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு.

162. விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

163. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து.

165. அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

166. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

168. அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

169. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

170. அழுக்கற் றகன்றாரும் இல்லைஅஃ தில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

பொருள் :- 161. அழுக்காறாமை — பொறாமையால் வரும் மனக் கோட்டத்தைச் செய்யாமை; அழுக்காறு – பொறாமை. 162. அழுக் காற்றின் அன்மை – அழுக்காறு செய்யாமை. 163. அழுக்கறுப்பான்– அழுக்காறு செய்வான். 164. இழுக்குஆற்றின் — தீநெறியால்; படுபாக்கு – வருதல். 165. ஒன்னார் – பகைவர்; வழுக்கியும் – தப்பியும். 167. அவ்வித்து – பொறாது; செய்யவள் – திருமகள்; தவ்வை – மூத்தவள். 168. திரு – செல்வம்; செற்று – கெடுத்து; தீயுழி – நரகத்தில். 169. அவ்விய – பொறாமையுடைய. 170. அகன்றார் – பெரியர் ஆயினார்; பெருக்கம் – செல்வம்.

# 18. வெஃகாமை

171. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

173. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

174. இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

175. அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

176. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

177. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

178. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

179. அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு.

180. இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு.

**பொருள்** :– வெஃகாமை – பிறர்பொருளை விரும்பாமை. 171. நடு– நடுவுநிலைமை; பொன்றி - கெட்டு. 172. வெஃகி - விரும்பி; பழிப்படுவ- பழியுண்டாவன. 174. புன்மையில் – குற்றம் இல்லாத. 175. அஃகி அகன்ற – நுண்ணிதாகப் பரந்த; வெறிய – அறிவோடு பொருந்தாத செயல்கள். 176. ஆற்றின்கண் – இல்லற நெறியிலே. 177. வெஃகி ஆம் ஆக்கம்; ஆம் – ஆகின்ற; விளைவயின் – அனுபவிக்கும்பொழுது; மாண்டற்கு அரிதாம் – நன்றாதல் இல்லை. 178. அஃகாமை – சுருங்காமைக்குக் காரணம்; செல்வத்திற்கு யாது. 180. இறல் – இறுதி, கேடு; விறல் – வெற்றி; செருக்கு – செல்வம், பெருமிதம்.

# सत्रहवां परिच्छेद

# अमात्सर्य

(161) किसी भी मनुष्य को ईर्षालु नहीं होना चाहिये। क्योंकि मात्सर्य के अभाव को ही धर्म कहते हैं।

(162) किसी से ईर्ष्या न करो। क्योंकि संसार में अमात्सर्य से बढ़कर और कोई सम्पत्ति नहीं है।

(163) जो मनुष्य अन्य के धन की ईर्ष्या करता है वह न तो धर्म का प्रेमी है और न धन का।

(164) समझदार लोग ईर्ष्यालु होकर कभी अन्य को हानि पहुँचाने का प्रयत्न नहीं करते। क्योंकि इससे पैदा होने वाली बुराई को वे भलीभांति समझते हैं।

(165) ईर्ष्यालु मनुष्य को अपने नाश के लिये किसी शत्रु की आवश्यकता नहीं। क्योंकि उनकी ईर्ष्या ही उसको नष्ट करने के लिये पर्याप्त है।

(166) जो मनुष्य दूसरों को दान करते हुए देखकर डाह से जलता है वह शीघ्र ही सकुटुम्ब नाश को प्राप्त होता है।

(167) लक्ष्मी, ईर्ष्यालु पुरुष को छोड़कर चली जाती है और उसको अपनी बड़ी बहिन (दरिद्रता) को सौंप देती है।

(168) ईर्ष्या बड़ा भयंकर पाप है। यह मनुष्य की सम्पत्ति को नष्ट कर उसे नरक में पहुँचा देती है।

(169) ईर्ष्यालु पुरुष की समृद्धि और धर्मात्मा पुरुष की दरिद्रता ये दोनों ही चिन्तनीय विषय हैं।

(170) ईर्ष्या से कोई फलफूल नहीं सकता। जो अमत्सरी होता है उसको लक्ष्मी कभी नहीं छोड़ती।

## अठारहवां परिच्छेद

# निर्लोभता

(171) जो मनुष्य अन्याय-पूर्वक अन्य की सम्पत्ति का लालच करता है उसका वंश नष्ट हो जाता है और उसके पाप बढ़ते ही जाते हैं।

(172) जो मनुष्य न्याय-पूर्वक जीवन व्यतीत करना चाहते हैं वे लोभ के वश में होकर तरह तरह के पाप नहीं कमाते।

(173) वे मनुष्य जो आत्यन्तिक सुख प्राप्त करना चाहते हैं वे छोटे-मोटे लोभ के कारण पापमय कार्यों में कभी प्रवृत्त नहीं होते।

(174) निष्कलंक चरित्र वाले बुद्धिमान् पुरुष जिन्होंने अपनी इन्द्रियों पर विजय प्राप्त करली है वे, चाहे कैसी भी दरिद्रावस्था में निमग्न क्यों न हों, दूसरों की सम्पत्ति का लालच नहीं करते।

(175) मनुष्य की उस तीक्ष्ण और सूक्ष्म बुद्धि से क्या प्रयोजन ? यदि वह लोभ के वशीभूत होकर मूर्खतापूर्ण कार्य करता है।

(176) वे मनुष्य भी, जो गौरवपूर्ण जीवन व्यतीत करते हैं, नाश को प्राप्त हो जायँगे यदि वे लोभ के विचारों को अपने हृदय में स्थान देते हैं।

(177) दूसरे मनुष्यों की सम्पत्ति की इच्छा न करो। क्योंकि सब पापों का उदय लोभ से ही होता है।

(178) यदि तुम चाहते हो कि तुम्हारी सम्पत्ति सुरक्षित रहे तो लोभ से निर्मुक्त रहने की भावना करो।

(179) बुद्धिमान् लोग जो जानते हैं कि धर्म क्या है, कभी भी लोभ नहीं करते। लक्ष्मी उनके पास दौड़ कर बिना बुलाए हुए आवेगी।

(180) लोभान्ध मनुष्य अपना नाश अपने आप बुलाता है। लालच से निर्मुक्ति ही संसार में उसको विजयी बना सकती है।

# 19. புறங்கூறாமை

181. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது.

182. அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை.

183. புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

184. கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.

185. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்
புன்மையாற் காணப் படும். [சொல்லும்

186. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

188. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

189. அறனோக்கி ஆற்றும்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

190. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

பொருள்:— புறங்கூறாமை — காணாத வழிப்பிறரை இகழ்ந்து சொல்லாமை. 181. அல்ல — பாவம். 182. அழீஇ — அழித்து. 184. கண்நின்று - ஒருவன் எதிரே நின்று; கண் (அற) – கண் – கண்ணோட்டம் – தாட்சணியம், முன்இன்று – எதிரில் இல்லாதபொழுது; பின் — பின்வரும் குற்றம். 185. அன்மை — அல்லன் என்பது. 187. பக – நீங்கும்படி, கேளிர் – உறவினர்; தேற்றாதவர் – அறியாதவர். 188. துன்னியார் – தம்மோடு சேர்ந்தார்; மரபினார் – இயல்பினையுடையார்; ஏதிலார் – பகைவர். 189, ஆற்றுங்கொல் – பொறுக்கின்றது போலும்; வையம் – உலகம்; பொறை – உடல்பாரம். 190. காண்கிற்பின் – காணவல்லவர் ஆயின்.

# 20. பயனிலசொல்லாமை

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

192. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது.

193. நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை.

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து.

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை உடையார் சொலின்.

196. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்.

197. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

198. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

200. சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல்.

பொருள் :- 191. எல்லாரும் – எல்லாராலும். 192. நயன் இல– விருப்பம் இல்லாத செயல்கள். 193. நயன் – நீதி; பாரித்து – பிரித்து; 194. பல்லாரகத்து – பலர்இடத்துக் கூறுவான் ஆயின். 195. சீர்மை– ஒழுக்கம். 196. மகன்எனல் – மகன் என்று சொல்லாதே, பதடி எனல் – மக்களில் பதர் என்று சொல்லுக. 198. ஆயும் – ஆராயும். 199. பொருள்தீர்ந்த — பயன் இல்லாத சொல்; பொச்சாந்தும் — மறந்தும்; மருள் – மயக்கம்; காட்சியவர் – மெய்யறிவு உடையவர். 200. சொல்லின் – சொற்களில், சொல்லவேண்டுமானால்.

# उन्नीसवां परिच्छेद

## अपैशुन्यता

(181) मनुष्य अन्य प्रकार का बुराइयों को करने का दोषी हो सकता है किन्तु उसे चुगली करने का दोष कभी नहीं कमाना चाहिये।

(182) जो मनुष्य सामने हँसकर पीठपीछे चुगली करता है वह पापी से भी भयंकर पाप करता है।

(183) चुगली करके जीवन बिताने की अपेक्षा मर जाना अच्छा है क्योंकि इस प्रकार मरने से धर्म का फल प्राप्त होता है।

(184) मुँह के सामने जो कुछ बुरे से बुरा कहना हो, कहो किन्तु पीठपीछे चुगली कदापि न करो।

(185) मुँह से कोई कितनी ही नेक बातें क्यों न करे किन्तु पैशुन्यता से भरी हुई उसकी बातें उसके हृदय की लघुता को प्रकट कर ही देती हैं।

(186) यदि तुम दूसरे की बुराई करते हो तो वह भी तुम्हारे दोषों को खोजकर तुम्हारी बुरी बुरी बातों को प्रकट कर देगा।

(184) वे मनुष्य जो चुगली करके अपने मित्रों को अपने से अलग कर देते हैं, अपनी विनम्र वाणीद्वारा मैत्री स्थापित करने की कला को भूल जाते हैं।

(188) जो मनुष्य अपने मित्रों के दोषों की स्पष्ट रूप से चर्चा करते हैं, वे अपने शत्रुओं के दोषों को किस प्रकार छोड़ सकते हैं।

(189) जो मनुष्य दूसरे मनुष्यों की निन्दा करते हैं पृथ्वी उनके पदाघातों को किस प्रकार सहन करती है? सम्भव है यह उसका सहनशीलता ही का गुण है जिसके कारण वह ऐसा करती है।

(190) यदि मनुष्य अपने दोषों के समान ही अन्य के दोषों को समझे तो क्या कभी उसे बुराई हानि पहुँचा सकती है?

## बीसवां परिच्छेद

# ओछी बोली

(191) जो मनुष्य ओछी बातों में आनन्द लेता है, उससे सब घृणा करते हैं।

(192) अनेक मनुष्यों के सामने ओछी बातें करना मित्रों के प्रति अनुचित कार्य करने से बदतर है।

(193) ओछी बातों में अधिक दिलचस्पी लेने से मनुष्य की सत्यता पर आघात पहुँचता है।

(194)सब आदमियों के सामने ओछी बातें करने से मनुष्य की न्याय-शीलता नष्ट हो जाती है और समस्त सद्गुणों का अभाव हो जाता है।

(195) यदि सत् स्वभाव वाले मनुष्य निरर्थक बातें करते हैं तो उनका बड़प्पन और गौरव नष्ट हो जायगा।

(196) जो मनुष्य ओछे व्यवहार में रत रहता है वह मनुष्यों में कूड़े के समान है।

(197) बड़े आदमी मिथ्या-भाषण करें यह अच्छा है, किन्तु इससे भी अधिक अच्छा यह है कि वे ओछी बातें बिल्कुल न करें।

(198) दूर-दृष्टि वाले मनुष्य ऐसी भाषा कभी नहीं बोलते जिसका कोई विशेष अर्थ नहीं होता।

(199) जिन मनुष्यों की बुद्धि निर्मल है वे, भूल करके भी निरर्थक बातें कभी नहीं करते।

(200) सर्वदा सार्थक बातें करो; निरर्थक बातें कभी न करो।

# 21. தீவினையச்சம்

201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

202. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

203. அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

205. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

206. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று.

209. தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

210. அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

**பொருள் :–** 201. செருக்கு – மயக்கம்; விழுமியார் – பெரியோர். 203. செறுவார் — தமக்குத் தீமை செய்வார்; செய்யா — செய்யாது. 206. தீப்பால – தீயவை; நோய்ப்பால – துன்பம்செய்யும் பாவங்கள்; அடல் – வருத்துதல். 207. வீயாது – நீங்காது; அடும் – கொல்லும். 208. அடிஉறைந்தற்று — அடியின்கண் தங்கிய தன்மைத்து. 209. துன்னற்க – செய்யாது ஒழிக. 210. அருங்கேடன் – கேடு இல்லாதவன்; மருங்கு – தீயவழி,

# 22. ஒப்புரவறிதல்

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

214. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

218. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

219. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யா தமைகலா ஆறு.

220. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

பொருள் :– ஒப்புரவு அறிதல் - உலகநடையினை அறிந்து செய்தல். 211. கடப்பாடு — ஒப்புரவு, மாரி — மேகம். 212. தாள்ஆற்றி — முயற்சிசெய்து, தந்த-ஈட்டிய, வேளாண்மை-உதவி. 213. புத்தேள்-தேவர், ஈண்டும் — இவ்வுலகத்தும். 214. ஒத்தது — ஒப்புரவு; 215. ஊருணி - ஊரில்வாழ்வார் தண்ணீர் உண்ணும்குளம். 216. நயன் உடையான் – ஒப்புரவு செய்வான். 218. இடன் – செல்வம், கடன் அறிகாட்சியவர் — செய்யத்தக்கவை அறிந்த இயற்கையுடையவர். 219. நல்கூர்ந்தான் — ஏழை, செயும்நீர — செய்யவேண்டிய ஒப்புரவுகள், ஆறு – இயல்பு. 220. கோள்தக்கது உடையது – கொள்ளும் தகுதியை உடையது.

## इक्कीसवां परिच्छेद

# बुरे कर्मों का भय

(201) जिन मनुष्यों का हृदय पाप करते करते कठोर हो गया है वे बुराई से कभी नहीं डरते। किन्तु भले मनुष्य बुराई से सदा डरते रहते हैं।

(202) पाप का भय अग्नि-भय से भी अधिक होना चाहिये। क्योंकि पाप मनुष्य को विनाश की ओर ले जाता है।

(203) कहते हैं, बुद्धिमत्ता इसी में है कि बुराई करनेवाले के प्रति भी बुराई नहीं करनी चाहिये।

(204) भूल करके भी दूसरों के विरुद्ध बुराई करने का विचार नहीं करना चाहिये। क्योंकि न्याय का देवता हमेशा उसके नाश की सोचता रहता है जो दूसरों की बुराई करना चाहता है।

(205) अपनी दरिद्रता के कारण किसी मनुष्य को पाप में लवलीन नहीं होना चाहिये। क्योंकि ऐसा करने से वह और भी अधिक दरिद्र बन जायगा।

(206) यदि कोई मनुष्य दुखों से मुक्ति पाना चाहता है तो उसे दूसरों की बुराई करने से बचना चाहिये।

(207) तुम शत्रुओं से तो बच सकते हो किन्तु पाप से छुटकारा नहीं पा सकते। पाप बुरी तरह तुम्हारा पीछा करता है।

(208) पाप परछाई की भाँति मनुष्य जहाँ जाता है वहीं उसका पीछा करता है और विनाश करता है।

(209) यदि मनुष्य को अपने से प्रेम है तो उसे पाप कर्म में कदापि रत नहीं होना चाहिये।

(210) जो मनुष्य सत्यमार्ग से विचलित नहीं होता उसे दुःख का सामना कभी नहीं करना पड़ता।

## बाईसवां परिच्छेद

# परोपकार

(211) जो तुम उपकार करते हो उसके बदले की कभी आशा न करो। भला बतलाओ, संसार जल बरसाने वाले बादलों को वर्षा के बदले में क्या देता है ?

(212) मनुष्य, मेहनत करके जो कुछ द्रव्य कमाता है, वह दूसरों की सहायता के लिये ही होती है।

(213) क्या इस लोक में या परलोक में परोपकार से बढ़ कर कोई वस्तु हो सकती है ?

(214) जो मनुष्य संसार के साथ सामञ्जस्य रखता है उसी का जीना, जीना है। अन्य मनुष्यों की तो मृतकों में गणना करनी चाहिये।

(215) समझदार मनुष्य की सम्पत्ति उस स्रोत के समान होती है जिसका प्रवाह कभी बंद नहीं होता।

(216) उदार हृदय मनुष्य का धन उस वृक्ष के समान है जो गाँव के मध्य में फलता-फूलता है।

(217) उपकारी मनुष्य का धन उस वृक्ष के समान है जो औषधियों को प्रदान कर लोगों को रोग से मुक्त करता है।

(218) दीर्घदृष्टि मनुष्य, दरिद्रतासे आविष्ट होने पर भी अपनी उदारता का परित्याग नहीं करता।

(219) परोपकारी मनुष्य अपने को निर्धन तभी स्वीकार करता है जब वह देखता है कि वह सहायता माँगने वालों की इच्छा को पूर्ण नहीं कर सकता।

(220) यदि परोपकार करते-करते भी मनुष्य को दरिद्रता आ घेरती है तो उस दासता को खरीदने के लिये आत्म-विक्रय भी करना पड़े तो उसे करने में हिचकना नहीं चाहिये।

# 23. ஈகை

221. வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

222. நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

224. இன்னு திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு

225. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

226. அற்றூர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றுன் பொருள்வைப் புழி.

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

228. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

229. இரத்தலின் இன்னுது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

230. சாதலின் இன்னுத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

**பொருள்** ;— 221. குறிஎதிர்ப்பை — அளவு குறித்து வாங்கி அவ் வாங்கியவாறே கொடுப்பது. 222. நல்லாறு – வீட்டுலகிற்கு நல்ல நெறி. 223. இலன் – வறியன், எவ்வம் – துன்பம், இக்குறட்குப் பல உரைகள் உண்டு. 225. ஆற்றுவார் — தவத்தான் வலிமை உடையவர். 226. அற்றூர் – வறியார், அழிபசி – மிக்க பசி, வைப்புழி- தேடினபொருள் வைத்தற்குரிய இடம். 227. பாத்து — பகுத்து, மரீஇயவன் – பழகியவன். 228. தாம் உடைமை – தாம் உடைய பொருள், வன்கணவர் - அருள் இல்லாதவர். 229. மன்ற - உறுதியாக, நிரப்பிய — தேடியஉணவு, தமியர் — தனித்து. 230. அதூஉம் — அச் சாதலும், இயையாக்கடை – முடியாதவழி.

# 24. புகழ்

231. ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு.

232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்.

233. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

235. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

236. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

237. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

238. வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

239. வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம்.

240. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

பொருள் :- 231. இசைபட — புகழ்உண்டாக, அது — புகழ், ஊதியம் — பயன். 233. ஒன்றா — தன்னோடு ஒப்பது இல்லாமல், பொன்றாது – அழியாது. 234. நிலவரை – நிலஎல்லை, ஆற்றின் – செய்தால், புலவரை – தேவர்களை. 235. நத்தம் – புகழ்உடம்பு, சாக்காடு – சாதல், வித்தகர் – அறிஞர். 236. அஃது – புகழுக்கு ஏதுவாகிய குணம். 237. நோவார் – நோவாமல், எவன் – எதுகருதி. 238. இசை — புகழ். 239. வசை — பழி, யாக்கை — உடம்பு, பொறுத்த — சுமந்த.

## तेईसवां परिच्छेद

# दानशीलता

(221) निर्धनों को दान देना ही सच्चा दान है; अन्य सब प्रकार का दान उधार-खाते के समान है।

(222) दान लेना अत्यन्त बुरा है चाहे उससे स्वर्ग भी क्यों न प्राप्त हो। दान देना सर्वोत्तम धर्म है चाहे उससे स्वर्ग के दरवाजे बन्द ही क्यों न होजावें।

(223) जो स्वभाव से उत्तम पुरुष हैं वे कभी याचना नहीं करते; वरन् दान देने की शक्ति प्राप्त करने के पहले से ही देना शुरू करते हैं।

(224) यद्यपि दान ग्रहण करना अत्यन्त दुखदायक है तथापि याचक के चेहरे पर मुस्कराहट की रेखा को देखे बिना दानी का हृदय प्रसन्न नहीं होता।

(225) तपस्या की परीक्षा क्षुधा की विजय में है किन्तु उससे भी बढ़कर उस मनुष्य की विजय है जो दूसरों की बुभुक्षा को शान्त करता है।

(226) धनवानों को चाहिये कि वे क्षुधा-पीड़ित दरिद्रों की क्षुधा को शान्त करें। इस प्रकार का दान अपने लिये ही दान होता है।

(227) जो मनुष्य अपने भोजन का भाग गरीबों को देकर भोजन करता है उसे महाभस्मक रोग कभी नहीं सताता।

(228) कठोर दिल धनवान् जो अपनी सम्पत्ति को छिपाकर संचय करते हैं; शायद वे दान देने के आनन्द को जानते ही नहीं।

(229) भिक्षा माँगने से भी बढ़कर बुरा उस मनुष्य का भोजन करना है जो अकेला ही भोजन करने में आनन्द मनाता है।

(230) मृत्यु से बढ़कर और कोई दुःख नहीं है किन्तु मृत्यु से भी बदतर दान न करना है।

# चौबीसवां परिच्छेद

## यश

(231) दान देकर यश का अर्जन करो। संसार में इससे बढ़कर और कोई लाभ नहीं है।

(232) प्रशंसा करनेवालों के मुख पर सर्वदा उस मनुष्य का नाम रहता है जो निर्धनों को दान देने के लिये प्रख्यात है।

(233) संसार में सब वस्तुएं नष्ट हो जाती हैं; यश ही केवल ऐसा है जो कभी नष्ट नहीं होता।

(234) देवता लोग साधु सन्तों को नहीं चाहते किन्तु जिनका यश पृथ्वी पर फैला हुआ है उनकी देवता भी प्रशंसा करते हैं।

(235) मरणशील और विनाशशील वस्तुओं में से बुद्धिमान् लोग उस वस्तु को खोजकर ग्रहण करते हैं जो चिरस्थायी रहती है।

(236) मनुष्य को जन्म इसीलिये धारण करना चाहिये जिससे उसकी कीर्ति चारों तरफ फैले। जिनकी अपकीर्ति फैल रही है वे पैदा ही न हों तो अच्छा है।

(237) जिनकी संसार में बदनामी फैल रही है उन्हें अपने पर बिगड़ना चाहिये। उन्हें दूसरों पर बिगड़ने का कोई अधिकार नहीं है।

(238) संसार उस मनुष्य की निन्दा करता है जो अनन्त काल तक रहनेवाले यश को पैदा नहीं करता।

(239) जो देश बदनामी के बोझ से लदे हुए मनुष्य के भार को धारण करता है उसकी समृद्धि धीरे-धीरे नष्ट हो जाती है।

(240) संसार में जीवन उन्हीं मनुष्यों का है जिनकी कीर्ति अक्षुण्ण है। जिनका जीवन कीर्ति-रहित है वे मृत-तुल्य गिने जाते हैं।

துறவறவியல்

# 25. அருளுடைமை

241. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

242. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேறினும் அஃதே துணை.

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

244. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

245. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலம் கரி.

246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

247. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

248. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

250. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

பொருள் :— 241. பூரியார் – இழிந்தார். 243. புகல் – புகுதல். 245. ஆள்வார் – உடையார், வளி – காற்று, மல்லல் – வளம், கரி – சான்று. 246. அல்லவை — கொடுமைகள், பொருள் — உறுதிப் பொருள் – அறம், பொச்சாந்தார் – மறந்தவர். 247. அவ்வுலகம் – வீட்டுலகத்து இன்பம், இல்லாகியாங்கு — இல்லையானாற்போல. 248. பூப்பர் – செல்வத்தால் பொலிவர். 249. தெருளாதான் – ஞானம் இல்லாதவன், தேரின் – ஆராய்ந்தால். 250. தன்னை – தான் அஞ்சி நிற்கும் நிலையை.

# 26. புலான்மறுத்தல்

251. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

252. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா
உடல்சுவை உண்டார் மனம். [தொன்றன்

254. அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.

255. உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

256. தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

பொருள் :- 252. பொருள் ஆட்சி - பொருளால் பயன்கொள்ளுதல், போற்றாதார்க்கு-பாதுகாவாதவர்க்கு, ஆங்கு அதுபோல. 253. படை-கொலைக்கருவி, நன்றூக்காது - அருளைநோக்காது. 254. அருள் கொல்லாமை, அருளல்லது கோறல், கோறல் — கொல்லுதல், பொருளல்லது - பாவம். 255. அளறு - நரகம். 256. புலாஅல் - புலால். 258. செயிர் - குற்றம், தலைப்பிரிந்த - நீங்கிய, காட்சியார் - அறிவினையுடையவர். 259. வேட்டலின்—யாகம்செய்தலைக் காட்டிலும், செகுத்து - போக்கி.

# द्वितीय भाग—वैराग्य

## पच्चीसवां परिच्छेद

## दया

(241) संसार में दया-भाव ही सबसे उत्तम सम्पत्ति है क्योंकि पार्थिव सम्पत्ति तो अधम-पुरुषों के पास भी पाई जाती है।

(242) दया धारण करो। सब सिद्धान्तों का मूलाधार दया-भाव ही है।

(243) जिन मनुष्यों का हृदय दया से ओत-प्रोत है, वे अन्धकार-मय नरकलोक को कभी नहीं जाते।

(244) जो मनुष्य जीवों पर दया-भाव रखते हैं उन्हें उन पाप के फलों को भोगना नहीं पड़ता जिन्हें देखकर ही आत्मा काँप उठती है।

(245) दयालु पुरुषों को दुःख कभी नहीं सताते। वात-वलयों से आवेष्टित पृथ्वी इसकी साक्षी है।

(246) निर्दय मनुष्य जो हिंसा के कार्यों में आनन्द लेता है, शायद नहीं जानता कि उसे कैसा फल भोगना है ?

(247) जिस मनुष्य के हृदय में दया नहीं है उसके लिये स्वर्ग नहीं है। जैसे वैभव-रहित मनुष्य के लिये यह पृथ्वी नहीं है।

(248) सांसारिक वैभव से रहित मनुष्य तो किसी दिन वैभव-शाली हो सकता है किन्तु जिनके हृदय में दया नहीं है उनका उद्धार कभी नहीं हो सकता।

(249) कठोर हृदय मनुष्य के लिये धर्म-धारण करना जितना सरल है उतना ही अज्ञानी के लिये ज्ञान का प्रकाश पा लेना आसान है।

(250) दुर्बलों को न सताओ। याद करो कि जब कभी बलवान् तुम्हें सतावेगा तो तुम्हारी क्या दशा होगी ?

## छब्बीसवां परिच्छेद

# मांसाहार-त्याग

(251) जो मनुष्य दूसरे जीवों के मांस को खाकर अपना शरीर पुष्ट करता है क्या वह अहिंसा के तत्त्व का अर्थ समझ सकता है ?

(252) व्यर्थ खर्च करनेवाले के पास जैसे सम्पत्ति नहीं रह सकती। ठीक उसी प्रकार मांसाहारी के हृदय में दया-भाव नहीं रह सकता।

(253) जो मनुष्य मांसाहार करता है उसके हृदय में दया उसी प्रकार नहीं रहती जैसे हथियार धारण करनेवाला मनुष्य निर्दय होता है।

(254) किसी जाव को न मारना ही दया है। तथा मांसाहार करना ही महापाप है।

(255) जहाँ मांसाहार है क्या वहाँ जीवन की झलक मिल सकती है ? उसी प्रकार जो मांस-भक्षण करते हैं क्या वे नरक जाने से बच सकते हैं ?

(256) यदि मनुष्य मांसाहार के लिये जीवों को मारना बन्द कर दें तो क्या बाज़ार में खरीदने के लिये मांस मिल सकता है ?

(257) यदि मनुष्य एक बार यह अनुभव करले कि मांस जीव-की हत्या को छोड़कर और कुछ नहीं है तो वह फिर मांसाहार कदापि न करेगा।

(258) निर्मल दृष्टिवाले मनुष्य मारे हुए प्राणी की निर्जीव लाश का भक्षण नहीं करते।

(259) यज्ञों में हजारों आहुतियों के देने की अपेक्षा जीवों को मारकर न खाना उत्तम है।

(260) जो मनुष्य किसी जीव का घात नहीं करता है और न मांसाहार करता है, सारा विश्व उस मनुष्य की हाथ जोड़कर प्रशंसा करता है।

# 27. தவம்

261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

262. தவமும் தவம்உடையார்க் காகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

265. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

266. தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.

267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

268. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

270. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

பொருள் :- **261.** நோன்றல் – பொறுத்தல், உறுகண் – துன்பம், உரு — வடிவு. **262.** அவம் — பயனில்முயற்சி. **263.** துப்புரவு — உணவும் மருந்தும் உதவுதல், ஒன்னார் — (அறத்திற்குப்) பகைவர், தெறல் – கெடுத்தல். **266.** மற்று அல்லார் – பொருள் இன்பங்களைச் செய்வார். **267.** சுடரும் – ஓடும், ஒளிவிடும் – (பாவம் நீங்கி) ஞானம் மிகும், நோற்கிற்பவர்க்கு — தவம் செய்யவல்லார்க்கு. **268.** அறப் பெற்றான் – தனக்கு உரியதாகப்பெற்றான், மன்உயிர் – நிலைபெற்ற உயிர். **269.** கூற்றம் குதித்தல் — யமனைக்கடத்தல். **270.** இலர் — பொருள் இல்லாதவர்.

# 28. கூடாவொழுக்கம்

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்.

273. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

274. தவமறைந்து அல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவும் தரும்.

276. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

278. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.

பொருள் :- 271. படிற்றொழுக்கம் – மறைந்தஒழுக்கம். 272. எவன் செய்யும் – என்னபயனைச் செய்யும். 273. வல்லுருவம் – வலிதாகிய தவஉருவம் கொள்ளுதல், பெற்றம் – பசு. 274. புள்சிமிழ்த்தற்று – பட்சிகளைப்பிணிப்பது போலும். 275. எற்று – என்செய்தேம், ஏதம்– துன்பம். 276. வன்கணார் இல் – வஞ்சகர் இல்லை. 277. புறங்குன்றி– குன்றியின் புறம், குன்றி – குண்டுமணி, கண்டு அனையர் ஏனும் – கண்டாற்போல வேடத்தால் செம்மைஉடையர் ஆயினும், அகம் கரியார் – மனம் இருண்டு இருப்பார். 278. மாண்டார் – மாட்சியுடையவர். 279. கணை — அம்பு, வினைபடு பாலால் — செய்கையால், கொளல் – அறிந்துகொள்க.

# सत्ताईसवां परिच्छेद

## तपस्या

(261) सब परीषहों को सहना और किसी जीव को न सताना—बस इसी में सारी तपस्या का सार है।

(262) संयमी पुरुष ही तपस्या कर सकते हैं; अन्य पुरुषोंकी तपस्या सर्वथा निरर्थक है।

(263) तपस्वियों की सेवा शुश्रूषा करने के लिये कुछ मनुष्यों को होना चाहिये—क्या इसी विचार से अन्य लोग तपस्या के मार्ग को भूल गये हैं ?

(264) यह शक्ति तपस्या में ही है कि तुम इसके द्वारा अपने शत्रुओं को समाप्त कर सकते हो और जो तुमसे प्रेम करते हैं उन मित्रों को समुन्नत बना सकते हो।

(265) तपस्या के बलसे सब प्रकार की अभिलषित वस्तुएँ प्राप्त होती हैं; इसीलिये मनुष्य तपस्या करने के लिये उद्यत होते हैं।

(266) जो मनुष्य तपस्या करते हैं वे अपना भला करने में कर्तव्यशील गिने जाते हैं। किन्तु वे मनुष्य जो वासनाओं में फँसे रहते हैं अपना सर्वनाश करते हैं।

(267) अग्नि में तपाया हुआ सुवर्ण अत्यन्त शोभा को प्राप्त होता है इसी प्रकार जो मनुष्य तपस्या को तपते हैं और कष्ट सहन करते हैं उनका स्वभाव उतना ही समुज्ज्वल हो जाता है।

(268) जिन लोगों ने तपस्या द्वारा आत्मा के तत्त्व का परिज्ञान कर लिया है वे जगत्-वन्दनीय हो जाते हैं।

(269) वे मनुष्य जिन्होंने तपस्या द्वारा आत्म-शक्ति को प्राप्त कर लिया है वे मृत्यु पर भी विजय प्राप्त कर सकते हैं।

(270) संसार में दरिद्रों की संख्या इसलिये ही अधिक है क्योंकि तपस्या करनेवाले बहुत कम हैं।

## अट्ठाईसवां परिच्छेद

# मायाचार

(271) मनुष्य की पाँच इन्द्रियाँ अन्दर ही अन्दर हँसती रहती हैं जब वे उसके मायाचार को देखती हैं।

(272) मनुष्यका दिव्य तेजस्वी चेहरा किस कामका ? जब कि उसका हृदय पाप-प्रवृत्ति की ओर सदा झुका रहता है।

(273) जिस मनुष्य की चेतना नष्ट हो जाती है उसका तपस्वी के समान ओजस्वी चेहरा उस बैल के समान है जो शेर की खाल पहने हुए घास चरता रहता है।

(274) धर्म के परदे में जो पापाचरण करता रहता है वह उस बहेलिया के समान है जो झाड़ी में छुपकर परिन्दों को पकड़ता रहता है।

(275) जो मनुष्य तपस्वी का जीवन धारण कर मक्कारी करता है, वह अपने को अनन्त दुखों के समुद्र में डुबोवेगा।

(276) जो मनुष्य हृदय से तो खोखला होता है किन्तु बाह्य में यह दिखलाता है कि वह बड़ा तपस्वी है, उससे अधिक कठोरहृदय मनुष्य संसार में नहीं हो सकता।

(277) संसार में ऐसे मनुष्य अत्यधिक संख्या में पाये जाते हैं जो घुँघची के दाने के समान ऊपर से सुन्दर प्रतीत होते हैं किन्तु हृदय से काले होते हैं।

(278) ऐसे मनुष्य बहुत हैं जिनका हृदय कलुषित होता है किन्तु वे पवित्रात्मा बननेके लिये तीर्थ-स्थानों में स्नान करते फिरते हैं।

(279) तीर यद्यपि सीधा होता है किन्तु मृत्युदायक होता है। तम्बूरा टेढ़ा होता है फिर भी मधुर होता है। अतः मनुष्यों की परीक्षा उनके कर्तव्यों से करनी चाहिये।

(280) जिन कामों को संसार बुरा कहता है और तुम उनसे बचे हुए हो, तब तुम्हें न तो जटा रखने की आवश्यकता है और न सिर मुड़ाने की।

# 29. கள்ளாமை

281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்.

284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

285. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

286. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

287. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

288. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

பொருள் :– 281. எள்ளாமை – வீட்டினை இகழாது. 283. ஆவது– வளர்வது, அளவிறந்து – எல்லையைக்கடந்து. 284. கன்றியகாதல் – மிக்கஆசை, வீயா – கெடாத, விழுமம் – துன்பம். 285. பொச்சாப்புப் பார்ப்பார் – சோர்வுபார்ப்பவர். 286. அளவு – உயிர்முதலியவற்றை அளத்தலாகிய நெறி. 287. காரறிவாண்மை — மயக்க அறிவினை உடையராய் இருத்தல். 288. கரவு – வஞ்சனை. 289. அளவு அல்ல– தீய நினைவுகள், செய்தாங்கே – நினைத்தபொழுதே, வீவர் – கெடுவர், தேற்றாதவர் – அறியாதவர். 290. உயிர்நிலை – உடம்பு, தள்ளும் – தவறும், புத்தேள் – தேவர்.

# 30. வாய்மை

291. வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

292. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

293. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

294. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

296. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

298. புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

300. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

பொருள் :— 291. வாய்மை – மெய்ம்மை – உண்மை, சொலல் – சொல்லுதல். 292. புரை – குற்றம். 296. எய்யாமை – வருந்தாமல். 297. பொய்யாமையை இடைவிடாது செய்யின் பிற அறம் செய்ய வேண்டியதில்லை. 298. அகம் — மனம், காணப்படும் — உண்டாம். 299. பொய்யாவிளக்கு – பொய்யாமையாகிய விளக்கு.

# उनतीसवां परिच्छेद

## अचौर्य

(281) यदि तुम दूसरों द्वारा सन्मानित होना चाहते हो तो तुमको चाहिये कि दूसरों को लूटने की भावना से अपने को बचाओ।

(282) दूसरे मनुष्यों की सम्पत्ति को चुराने की भावना करना महापाप है।

(283) अन्याय से उपार्जन किया हुआ धन चाहे कितना ही विपुल क्यों न हो शीघ्र ही नष्ट हो जाता है।

(284) धन चुराने की अमर्यादित आकांक्षा मनुष्य को अनन्त-दुःखों के गर्त में डुबोती है।

(285) जो मनुष्य असावधान व्यक्तियों को लूटता है क्या उसमें कभी प्रेम और गौरव पाए जा सकते हैं ?

(286) जिन मनुष्यों का हृदय चोरी करने की भावना से जलता रहता है वे धर्म-मार्ग का अनुसरण कभी नहीं कर सकते।

(287) जो जीवन का मूल्य समझते हैं उनके हृदय, चोरी करने के कलुषित विचारों से, सदा उन्मुक्त रहते हैं।

(288) ईमानदार मनुष्य के हृदय में धर्म की स्थिति रहती है। किन्तु जिसको चोरी की लत पड़ जाती है उसका दिल मायाचारी से भरा हुआ होता है।

(289) जो मनुष्य चोरी करने के अतिरिक्त और कुछ नहीं जानते, वे सदा पापकर्मों में डूबकर तुरन्त सर्वनाश को प्राप्त होंगे।

(290) धोका देकर चोरी करनेवाले मनुष्यों का उनके शरीर भी साथ नहीं देते। किन्तु जो धर्मात्मा होते हैं उनका देवलोक में भी सन्मान होता है।

## तीसवां परिच्छेद

# सत्य

(291) सत्य क्या है? जिससे अन्य पुरुषों को किसी प्रकार का कष्ट न पहुँचे, ऐसे वचन बोलना ही सत्य है।

(292) वह असत्य भी सत्य के समान है जिससे किसी मनुष्य को कष्ट नहीं पहुँचता।

(293) अपनी आत्मा के विरुद्ध मनुष्य को कदापि असत्य भाषण नहीं करना चाहिये। अन्यथा मिथ्या-भाषण तुम्हारी अन्तरात्मा को ही जलायगा।

(294) जो मनुष्य सत्यनिष्ठ है वह सबके हृदयों पर विजय प्राप्त करता है।

(295) परोपकारी मनुष्य और साधु मनुष्य से वह बढ़कर होता है जो सर्वदा अपने हृदय से सत्य वचन ही निकालता है।

(296) मनुष्य की कीर्ति सत्य में ही निहित होती है। और सत्य से ही अन्य गुणों की भी प्राप्ति हो जाती है।

(297) केवल सत्याचरण करो। तुम्हें अन्य धर्मों के आचरण करने की आवश्यकता नहीं।

(298) जल से शरीर पवित्र होता है किन्तु सत्य से आत्मा की परिशुद्धि होती है।

(299) अन्य दीपक, दीपक नहीं कहलाते। महान् पुरुषों के लिये सत्य का दीपक ही दीपक है।

(300) हमने सब शास्त्रों का अध्ययन करके देखा है। 'सत्य से बढ़कर कोई धर्म नहीं है'।

# 31. வெகுளாமை

301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்.

302. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

305. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

306. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

308. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

309. உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

310. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

பொருள் :- 301. செல்இடம் — பலிக்கும் இடம் — தவத்தால் தன்னின் மெலியார், அல்இடம் — பலியாத இடம் — தவத்தால் தன்னின் வலியார். 303. மறத்தல் – செய்தல் ஒழிக. 305. கொல்லும்- கடுந்துன்பங்களை எய்துவிக்கும். 306. சேர்ந்தாரைக் கொல்லி — நெருப்பு, இனம் – முற்றத்துறந்து தவஞானங்களால் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவார். ஏமப் புணை – ஏமத்தை உபதேசிக்கும் தெப்பம், ஏமம் — அருள், பொறை முதலியன. 307. பொருள் – குணம். 308. இணர்எரி – பேரெரி, எரி — நெருப்பு, வெகுளாமைபுணரின் — வெகுளாமை கூடுமாயின். 309. உள்ளியது — நினைத்தது. 310. இறந்தார் — சினம்மிக்கவர், இறந்தார் – செத்தார், துறந்தார் துணை – வீடுபெற்றாரோடொப்பர்.

# 32. இன்னா செய்யாமை

311. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

312. கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

313. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

314. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

315. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

316. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை.

318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

319. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

320. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

**பொருள் :-** **311.** சிறப்பு ஈனும் செல்வம் – யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய எட்டுச்சித்திகள், மாசு அற்றார்கோள் – மனம் தூயார் துணிவு. **312.** கறுத்து – கோபித்து, செய்தவக்கண்ணும் – செய்த இடத்தும். **313.** செய்யாமல் – செய்யாதிருக்க, செய்தபின் – செய்தால். **314.** நன்னயம் – இனியசெயல்கள், விடல் – (பிறர்செய்த இன்னாமையையும், தான் செய்த நன்மையையும்) மறத்தல். **316.** செயல்துன்னாமை — செய்யாமை. **317.** மாணா — இன்னாத செயல்கள்.

# इकतीसवां परिच्छेद

## क्रोध न करना

(301) जो मनुष्य क्रोध करने का समय उपस्थित होने पर भी क्रोध नहीं करता है वही यथार्थ में अक्रोधी है। जिसमें क्रोध करने की शक्ति ही नहीं है उसका क्रोध करना और न करना बराबर है।

(302) यदि तुममें किसी को हानि पहुँचाने की शक्ति न हो तब भी क्रोध करना बुरा है। किन्तु जब तुम क्रोध द्वारा दूसरे को हानि पहुँचा सकते हो तब तो इसके बराबर बुराई कोई नहीं है।

(303) कभी किसी पर क्रोध न करो। क्योंकि क्रोध से ही अनेक दोष उत्पन्न होते हैं।

(304) क्या संसार में क्रोध से बढ़ कर शत्रु हो सकता है जो हास्य और आनन्द दोनों को नष्ट करता है ?

(305) यदि मनुष्य अपनी रक्षा करना चाहता है तो उसे क्रोध नहीं करना चाहिये। यदि ऐसा न करोगे तो क्रोध स्वयं तुम्हें आ दबोचेगा।

(306) क्रोध मनुष्य के कुटुम्बी-जन को भी नष्ट कर देता है जो उसके जीवनको खेनेवाला होता है।

(307) जो मनुष्य अपने हृदय में क्रोध को स्थान देता है उसका नाश इस प्रकार निश्चित है :—जैसे कोई मनुष्य ज़मीन पर हाथ मारता है, उसको चोट लगे बिना नहीं रह सकती।

(308) यह उत्तम है कि तुम ऐसे मनुष्य के विरुद्ध भी क्रोध-भाव प्रकट न करो जो तुम्हें सहस्त्र-मुखी अग्नि की ज्वाला के समान कष्ट पहुँचाने का भी प्रयत्न करता हो।

(309) अपने चित्त से क्रोध निकाल दो। संसार में जो कुछ चाहते हो वह सब कुछ तुम्हें प्राप्त हो जायगा।

(310) जो मनुष्य अत्यन्त क्रोधी होता है वह राक्षस के समान है तथा जो क्रोध-रहित क्षमाशील होता है वह देवता के तुल्य है।

## बत्तीसवां परिच्छेद

# कष्ट न पहुंचाना

(311) निष्कलंक आचरण वाले मनुष्य का किसी को कष्ट न पहुँचाना स्वभाव होता है चाहे ऐसा करने से उसको विपुल सम्पत्ति और यश भी क्यों न प्राप्त हों।

(312) पवित्रात्मा मनुष्यों का यही स्वभाव होता है कि वे अपने अन्दर बुराई पैदा नहीं होने देते।

(313) यदि किसी व्यक्ति ने हमें अकारण कष्ट पहुँचाया है और हम उसका बदला लेना चाहते हैं तो बदला लेने की भावना भी हमें असह्य दुख का भाजन बनावेगी।

(314) सबसे सुन्दर बदला यह है कि शत्रु को अपने अनुकम्पा-पूर्ण व्यवहार से लज्जित किया जाय।

(315) मनुष्य की उस बुद्धि से क्या प्रयोजन है यदि वह अन्य पुरुषों के कष्टों को अपने कष्टों के समान नहीं समझता है और उनसे अपनी रक्षा नहीं करता है।

(316) वे सब काम सर्वथा छोड़ देने चाहिये जिनसे अन्य पुरुषों को कष्ट पहुँचता हो।

(317) किसी भी समय ज़रा भी किसी को कष्ट न पहुँचाना सबसे बड़ा धर्म है।

(318) मनुष्य दूसरों को कष्ट किस प्रकार पहुँचाता है जब वह स्वयं जानता है कि स्वयं अपने को किसी के द्वारा कष्ट मिलने पर कितना दुःख होता है।

(319) जिस प्रकार रात दिन का अनुसरण करती है उसी प्रकार पाप भी पाप का अनुसरण करता है।

(320) जो दूसरे जीवों को कष्ट पहुँचाते हैं उन पर स्वयं अनेक कष्ट आ पड़ते हैं। अतः जो मनुष्य यह चाहते हैं कि उन पर कोई कष्ट न आ पड़े, उन्हें चाहिये कि वे स्वयं किसी को कष्ट न पहुँचावें।

# 33. கொல்லாமை

321. அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

322. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

324. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி.

325. நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள் மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று.

327. தன்உயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்உயிர் நீக்கும் வினை.

328. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

329. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

330. உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பொருள்:– 321. பிறவினை – பாவச்செய்கைகள்; கோறல் – கொல்லுதல். 325. நிலையஞ்சி நீத்தார் – பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனை வாழ்க்கையைத் துறந்தார். 328. நன்று ஆகும் ஆக்கம் – வேள்விக்கண் கொன்றால் இன்பம் மிகும் செல்வம். 329. வினையர் – தொழிலையுடையர். 330. செயிர்உடம்பு –நோக்கலாகா நோயுடம்பு; செல்லா – வறுமைமிக்க.

ஞானம்

# 34. நிலையாமை

331. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

332. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

333. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

334. நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

336. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

338. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

339. உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

பொருள்:– ஞானம்– வீடுபயக்கும் உணர்வு. 331. புல்லறி வாண்மை- புல்லிய அறிவினை உடையராதல்; கடை – இழிபு. 332. விளிந்தற்று– போவதுபோலும். 333. அற்கா – நில்லாத; அற்குப – செய்யப்படும் அறங்கள்; ஆங்கே செயல் – அப்பொழுதே செய்க. 334. ஈரும் வாளது உயிர்-ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயதுஉயிர். 335. செற்று–அடக்கி, வாராமுன் – வருவதற்குமுன். 336. நெருநல் – நேற்று; பெருமை உடைத்து-நிலையாமை மிகுதியை உடையது. 338. குடம்பை-முட்டை, கூடு. 339. சாக்காடு–சாதல். 340. புக்கில்–எஞ்ஞான்றும் இருப்பதோர் இல்; அமைந்தின்று கொல் – அமைந்தது இல்லை போலும்; துச்சில் இருந்த–ஒதுக்குக்குடி இருந்த.

## तेतीसवां परिच्छेद

# अहिंसा

(321) अहिंसा परम धर्म है। हिंसा से ही अन्य सब पाप उत्पन्न होते हैं।

(322) सब धर्मों के शास्त्रों का यही उपदेश है—अतिथि-सेवा करो और किसी जीव को न सताओ।

(323) अहिंसा सब धर्मों में श्रेष्ठ है। सत्य का स्थान इसके बाद है।

(324) जो अहिंसा का मार्ग है वही सत्य का मार्ग है।

(325) जिस मनुष्य ने इस असार-संसार को त्याग कर साधु-मार्ग का आश्रयण किया है उससे भी बढ़कर अहिंसा-धर्मानुयायी होता है।

(326) मृत्यु का देवता, यम उस क्षेत्र पर कभी आक्रमण नहीं करता जहां अहिंसा धर्म फैला हुआ है।

(327) चाहे तुम्हारा जीवन भी क्यों न संकट में हो कभी किसी जीव को न सताओ।

(328) जो वास्तव में महान् पुरुष हैं वे जीव-हत्या द्वारा अर्जित धन को घृणा की दृष्टि से देखते हैं।

(329) समझदार लोगों की दृष्टि में वे मनुष्य दुष्ट गिने जाते हैं जो सदा हत्या के कार्यों में लवलीन रहते हैं।

(330) देखो, वह मनुष्य जिसका सड़ा हुआ शरीर पीवदार जख्मों से भरा हुआ है, अवश्य ही पूर्वजन्म में हत्यारा रहा होगा, ऐसा बुद्धिमान् मनुष्यों का कहना है।

## चौतीसवां परिच्छेद

# अनित्यता

(331) संसार में अनित्य पदार्थों को नित्य समझ लेने के बराबर बड़ी मूर्खता नहीं है।

(332) सम्पत्ति का कमाना तमाशा देखने के लिये आई हुई भीड़ के समान है। तथा धन का खर्च हो जाना उसी भीड़ के तितर-बितर हो जाने के समान है।

(333) समृद्धि क्षणस्थायी होती है। यदि तुम समृद्धिशाली बन भी जाओ तो अपने धन का सदुपयोग करने में देर न लगाओ।

(334) समय देखने में भोलाभाला और सरल प्रतीत होता है किन्तु वास्तव में यह तीक्ष्ण आरे के समान है जो मनुष्य के जीवन को धीरे-धीरे काटता रहता है।

(335) मौत की हिचकियाँ आने के पहिले और जबान बंद होने के पहिले ऐसे परमार्थ के काम करो जिससे मुक्ति की प्राप्ति हो जाय।

(336) कल तो एक मनुष्य था; आज वह नहीं है। संसार का यही गौरव है।

(337) किसी मनुष्य को पता नहीं है कि दूसरे क्षण में क्या होनेवाला है। परन्तु उसकी हालत को तो देखो, वह हजारों विचार रखता है।

(338) जीव का शरीर के साथ सम्बन्ध उसी प्रकार का है जैसे एक पक्षी का बच्चा, पर निकलते ही टूटे हुए अंडे के टुकड़ों को छोड़-कर, भाग जाता है।

(339) मृत्यु गाढ़ निद्रा के समान है। और जीवन उस गाढ़ निद्रा से जागने के समान है।

(340) इस विनाशीक शरीर में आत्मा को क्यों आश्रय ग्रहण करना चाहिये? क्या इसको कोई चिरस्थायी आश्रय नहीं मिलता?

# 35. துறவு

341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்,

342. வேண்டி னுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

344. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

345. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பு மிகை.

346. யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பொருள்:- 341. யாதனின் – யாதொரு பொருளின்; நோதல் இலன் – துன்புறுதல் இல்லை. 342. வேண்டின் – இன்பம் வேண்டின்; இயற்பால – உளவாம் இன்பங்கள். 343. அடல் – கெடுத்தல். 344. நோன்பிற்கு – தவம் செய்வார்க்கு; மயல் ஆகும் – மயங்குதற்கு ஏதுவாகும். 346. செருக்கு – மயக்கம். 347. விடாஅ– விடா; இடும்பைகள் – பிறவித்துன்பங்கள். 348. தலைப்பட்டார்– முத்தியை அடைபவர்; வலைப்பட்டார் – பிறப்பாகிய வலையுட்பட்டார். 350. பற்றற்றான் பற்றினை – இறைவன் ஓதிய வீட்டு நெறியை; பற்றுக – நன்னெறி என்று மனத்துக் கொள்க; அப்பற்றைப்பற்றுக – அதன் கண் உபாயத்தை மனத்தால் செய்க; (உபாயம் என்றது தியானசமாதிகளை)

# 36. மெய்யுணர்தல்

351. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணுப் பிறப்பு.

352. இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.

354. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

355. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

357. ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

358. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.

359. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

360. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

பொருள்:– 351. மருள் – விபரீத உணர்வு; மாணு – இன்பமில்லாத. 352. மாசறு காட்சியவர் – மெய் உணர்வினை உடையவர். 354. ஐயுணர்வு – மனம்; எய்தியக்கண்ணும் – தாரணைக்கண் நின்ற வழியும் இன்று – இல்லை. 355. அப்பொருள் – அப்பொருளின் கண் நின்று. 356. ஈண்டு – இம் மக்கட் பிறப்பில்; கற்று – உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர் பால் கேட்டு; தலைப்படுவர் – அடைவார்; ஈண்டு வாரா நெறி – மோட்ச நெறி. 357. ஒரு தலையா ஓர்த்து – (உபதேசப் பொருளைத்) தெளிய ஆராய்ந்து; உள்ளது – முதற் பொருள்; பேர்த்து – மீண்டும். 358. பிறப்பு என்னும் பேதைமை – பிறப்பிற்கு முதற் காரணம் ஆகிய விபரீத உணர்வு; சிறப்பு என்னும் செம்பொருள் – வீட்டிற்கு நிமித்த காரணம் ஆகிய இறைவன். 359. சார்பு – எல்லாப் பொருட்கும் சார்பு ஆகிய செம்பொருள்; சார்பு கெட – யான் எனது என்னும் இருவகைப் பற்றும் கெட; அழித்து – உணர்வு ஒழுக்கங்களை அழித்து; சார்தரா – சாரமாட்டா. 360. நாமம் – பெயர்; நோய் – வினைப்பயன்.

# पैतीसवां परिच्छेद

## त्याग

(341) मनुष्य ने जिस जिस वस्तु का परित्याग कर दिया है उस वस्तु से उत्पन्न दुःख से वह बचा रहता है।

(342) जो मनुष्य आरम्भ से ही त्याग का मार्ग ग्रहण करते हैं वे अनन्त सुख को प्राप्त होते हैं।

(343) अपनी इन्द्रियों को वश में करो और संसार की वस्तुओं के लिये लालसाओं का परित्याग कर दो।

(344) तपस्या का आदर्श त्याग में है। किसी वस्तु की लालसा करना मानो उसके मोह में पुनः फँसना है।

(345) अन्य प्रकार के रागों की क्यों चर्चा करते हो? शरीर-राग सबसे बड़ा राग होता है।

(346) जो मनुष्य 'मैं' और 'मेरा' के भावों के पैदा होने पर उनको दमन कर विजय प्रात कर लेता है वह देवलोक को प्रात होता है।

(347) जो मनुष्य इच्छाओं के दास हैं उन्हें संसार में अनेक प्रकार के दुःख भोगने पड़ते हैं।

(348) जो मनुष्य त्याग का मार्ग ग्रहण करते हैं, मुक्ति उन्हीं को प्रात होती है। संसार में लवलीन मनुष्य अनन्त जन्म-मरण की परम्परा में फँसता है।

(349) यदि सब राग-बन्धनों को काट दो तो एकदम जीवन का बन्धन टूट जायगा; अन्यथा बन्धन में फँसकर अवश्य दुःख उठाओगे।

(350) उस परमात्माकी शरण में जाओ जो वीतराग है और अपने मोह को छिन्न-भिन्न करने के लिये उसी का आश्रय ग्रहण करो।

## छत्तीसवाँ परिच्छेद

# तत्व-ज्ञान

(351) जिस मिथ्या ज्ञान द्वारा असत्य पदार्थ सत्य प्रतीत होते हैं उसी से दुःखमय जीवन की परम्परा का प्रवाह चलता है।

(352) जो मनुष्य सम्यक्-दृष्टि हैं वे अज्ञानान्धकार से विमुक्त होकर ज्ञान के प्रकाश को प्राप्त करते हैं।

(353) जिनकी बुद्धि आवरण-रहित है उनके लिये पृथ्वी की अपेक्षा स्वर्ग अत्यधिक समीप है।

(354) निर्दोष इन्द्रियों को प्राप्त करने से मनुष्य का कोई प्रयोजन सिद्ध नहीं होता यदि उसने उनसे सत्य ज्ञान प्राप्त नहीं किया है।

(355) कोई भी वस्तु क्यों न हो उसमें असत्य से सत्य को पृथक् कर देना ही बुद्धि का कार्य है।

(356) जिन मनुष्यों ने सम्यक् ज्ञान की प्राप्ति कर ली है वे पुनः इस संसार में प्रवेश नहीं करते।

(357) यदि मनुष्य ने सम्यक् ज्ञान खोजकर प्राप्त कर लिया है तो उसे पुनर्जन्म के भय से डरने की आवश्यकता नहीं।

(358) अज्ञान को दूर करने के लिये सम्यक् ज्ञान की प्राप्ति करो। बुद्धिमत्ता इसी में है।

(359) सत्य ज्ञान प्राप्त करने की चेष्टा करो। सत्य ज्ञान पर ही सब वस्तुयें अवलम्बित हैं। भविष्य जीवन में आनेवाले सब दुःख उससे दूर हो जायेंगे।

(360) काम, क्रोध, और मोह को अपनी आत्मा से अलग कर दो, तुम देखोगे कि तुम्हारे पुनर्जन्म की परम्परा नष्ट हो रही है।

# 37. அவா வறுத்தல்

361. அவா என்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்ப தில்.

364. தூஉய்மை என்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

365. அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர்.

366. அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

368. அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

369. இன்பம் இடையறா தீண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

பொருள்:– 361. தவாஅ – தவா – கெடாது வருகின்ற. 362. அது – பிறவாமை. 363. ஆண்டும் – மோட்ச உலகத்திலும். 364. தூஉய்மை – தூய்மை – வீடு ( – மோட்சம் ); அது – அவாவின்மை; வாஅய்மை – வாய்மை ( – இறைவனை ). 365. அற்றவர் – பிறவி அற்றவர்; அற்றாக – சில துன்பங்கள் அற்றதல்லது. 366. அஞ்சுவது – அவாவை அஞ்சுவது; ஓரும் என்பன இரண்டும் அசைநிலை. 367. ஆற்ற – மிகவும்; தவாவினை – பிறதுன்பங்களான் அழியாமைக்கு ஏதுவாகிய துறவறங்கள். 368. இல்லாகும் – இல்லை; அஃது – அவா; உண்டேல் – உண்டுஎனின்; தவா அது – தவாது – கெடாது. 369. ஈண்டும் – பெருகும். 370. ஆரா இயற்கை – நிறையாத இயல்பினையுடைய; பேரா இயற்கை – அழியாத இயல்பு – வீடு.

# 38. ஊழ்

371. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

372. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

375. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

376. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

378. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

379. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

380. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

பொருள்;— 371. அசைவின்மை – முயற்சி; மடி – சோம்பல். 372. இழவூழ்—கைப்பொருள் இழத்தற்குக் காரணம் ஆன ஊழ்; அகற்றும் – விரிக்கும்; உற்றக்கடை – தோன்றினல். 373. உண்மை அறிவு – (ஊழான் ஆகிய) பேதைமை உணர்வு. 374. திரு – செல்வம் உடையவர் ஆதல்; தெள்ளியர் – அறிவு உடையவர். 375. எல்லாஅம் – எல்லாம்; செயற்கு – உண்டாக்குவதற்கு. 376. பரியினும் – வருந்திக் காப்பினும்; பால் – ஊழ்; பால் அல்ல – ஊழ் அல்லாத பொருள்கள்; உய்த்துச் சொரியினும் – புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும்; தம – தம்முடைய பொருள்கள் 377. வகுத்தான்—தெய்வம்; துய்த்தல்—நுகர்தல். 378. துப்புரவு – நுகரும் பொருள்; உறற் பால – வந்து பொருந்தும் துன்பம்; ஊட்டா – பொருந்தாது. 379. நல்லவாக் காண்பவர் –, நல்லவை என்று அனுபவிப்பவர்.

**அறத்துப்பால் முற்றும்.**

## सैंतीसवां परिच्छेद

# तृष्णा-दमन

(361) विद्वानों का कहना है कि जन्म-परम्परा का अनादि वीज तृष्णा है।

(362) यदि तुम किसी वस्तु की कामना करते हो तो जन्म की परम्परा से छुटकारा पाने की कामना करो। और यह छुटकारा तभी प्राप्त होगा जब तृष्णा का पूर्ण परित्याग कर दोगे।

(363) तृष्णा के त्याग के बराबर संसार में और कोई सम्पत्ति नहीं है चाहे त्याग इस संसार में करो या स्वर्ग में करो।

(364) तृष्णा से रहित होने से बढ़कर मन की पवित्रता नहीं हो सकती। सत्य के लिये भावना से ही मन पवित्र होता है।

(365) जिन मनुष्यों ने तष्णा का परित्याग कर दिया है वे ही मुक्त पुरुष कहलाने के योग्य हैं, अन्य नहीं।

(366) यह तृष्णा ही है जो पाप में फँसाती है। मुनि-धर्म तृष्णाओं से सर्वदा डरता रहता है।

(367) धर्म का अभिलषित मार्ग उन लोगों के लिये खुला हुआ है जो तृष्णा का दमन करते हैं।

(368) जो किसी प्रकार की इच्छाओं से रहित हैं उनके लिये संसार में कोई दुःख नहीं है तथा जो तृष्णा की आग से जलते रहते हैं उनके दुःखों का कोई अन्त नहीं।

(369) जीवन का अनन्त आनन्द उस समय प्राप्त होता है जब तृष्णा जो सब पापों का मूल है, सर्वथा नष्ट हो जाती है।

(370) अपनी न तृप्त होनेवाली इच्छाओं का सर्वथा परित्याग कर दो। तुम देखोगे कि तुम्हें शाश्वत जीवन प्राप्त होता है।

# अड़तीसवां परिच्छेद

## दैव

(371) अच्छा भाग्य ही मनुष्य को अध्यवसायशील बनाता है और उसी से उसे प्रचुर सम्पत्ति प्राप्ति होती है। दुर्भाग्य से ही मनुष्य को आलस्य प्राप्त होता है जिससे वह निर्धन होकर बरबाद होता है।

(372) दुर्भाग्य से मनुष्य बुद्धिमान् से मूर्ख हो जाता है और अच्छे भाग्य से मनुष्य की मूर्खता भी बुद्धिमत्तापूर्ण समझी जाती है।

(373) इससे क्या हुआ यदि मनुष्य ने अत्यन्त सूक्ष्म ज्ञान प्राप्त कर लिया है ? मनुष्य के मस्तिष्क का नियंत्रण तो भाग्य से होता है।

(374) विश्व में भाग्य का दुहरा साम्राज्य है। यह मूर्ख को धनवान् बनाता है और बुद्धिमान् को निर्धन बनाता है।

(375) दुर्भाग्य के होने पर अच्छे दिन बुरे दिनों में परिवर्तित हो जाते हैं और बुरे दिन अच्छे दिनों में परिवर्तित हो जाते हैं।

(376) जब भाग्य तुम्हारे अनुकूल नहीं है तब तुम अपनी सम्पत्ति को प्रयत्न करने पर भी सुरक्षित नहीं रख सकते और जब भाग्य तुम्हारे अनुकूल है तब तुम अपनी सम्पत्ति को फेंक भी दो तब भी वह तुम्हारे पास से नहीं जावेगी।

(377) यदि भाग्य तुम्हारे ऊपर प्रसन्न नहीं है तो तुम करोड़पति होने पर भी अपनी सम्पत्ति का उपभोग नहीं कर सकोगे।

(378) निर्धन मनुष्य सरलता से त्याग की ओर अपना दिल लगा सकते हैं यदि दुर्भाग्य उनके पूर्व कर्मों के फल को भोगने के लिये कुछ बाधा उपस्थित न करे।

(379) सुख और दुःख के बारे में मनुष्य को क्यों चिन्ता करनी चाहिये ? आख़िरकार यह सब कर्मों का खेल है।

(380) दैव से बढ़कर बलवान् कौन हो सकता है ? जब हम इसको मेटने के लिये कुछ प्रयत्न करते हैं तब यह एकदम आकर हमें घेर लेता है।

THE. MA[illegible] TAMIL [illegible]

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். — ஔவையார்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் — போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். — நத்தத்தனார்

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடுகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | விநாயகர் திருமுறை | ... | 0 | 1 | 0 |
| 2. | குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் | ... | 6 | 0 | 0 |
| 3. | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ,, | ... | 3 | 0 | 0 |
| 4. | மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் | (மறுபதிப்பு அச்சில்) | | | |
| 5. | முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் ,, | ... | 1 | 0 | 0 |
| 6. | சிதம்பரச் செய்யுட் கோவை ,, | ... | 0 | 12 | 0 |
| 7. | கந்தர் கலிவெண்பா, ஆங்கிலம், ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் | ... | 0 | 6 | 0 |
| 8. | கந்தர் கலிவெண்பா மூலம் மட்டும் | ... | 0 | 1 | 0 |
| 9. | கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன் | ... | 0 | 4 | 0 |
| 10. | கந்தரனுபூதி | ... | 0 | 2 | 0 |
| 11. | அபிராமி அந்தாதி வெ. வா. ஐ. குறிப்புரையுடன் | (மறுபதிப்பு அச்சில்) | | | |
| 12. | சிவஞான சித்தியார், ஆங்கிலம், ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுடன் | ... | 5 | 0 | 0 |
| 13. | ஷை ஹிந்தி மட்டும் | ... | 1 | 0 | 0 |
| 14. | கந்தர் கலிவெண்பா திரு. பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன் | (மறுபதிப்பு அச்சில்) | | | |
| 15. | ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பா திருப்பல்லாண்டு | ... | 0 | 9 | 0 |
| 16. | சுந்தரர் தேவாரம் | ... | 1 | 0 | 0 |
| 17. | திருநாவுக்கரசர் தேவாரம் | ... | 1 | 0 | 0 |
| 18. | திருவாசகம் | ... | 0 | 6 | 0 |
| 19. | அம்மையார் அற்புதத் திருவந்தாதி | ... | 0 | 4 | 0 |
| 20. | முது மொழி மேல் வைப்பு | ... | 0 | 12 | 0 |
| 21. | திருஞானசம்பந்தர் தேவாரம் | ... | 2 | 8 | 0 |
| 22. | பதினோராந் திருமுறை | ... | 1 | 4 | 0 |
| 23. | நீதி நெறி விளக்கம்—ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் | ... | 0 | 8 | 0 |
| 24. | பெரிய புராணம் | ... | 2 | 8 | 0 |
| 25. | திரு மந்திரம் | ... | 1 | 8 | 0 |
| 26. | திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் | ... | 0 | 6 | 0 |
| 27. | திருவிளையாடற் புராணம் | ... | 3 | 0 | 0 |
| 28. | திருக்கோவையார் | ... | 2 | 0 | 0 |
| 29. | தாயுமானவர் சுவாமிகள் பாடல் | ... | 1 | 4 | 0 |
| 30 | திருக்குறள் – அறத்துப்பால் ஹிந்தி மொழிபெயர்ப்பு | | 1 | 8 | 0 |

கிடைக்குமிடங்கள் :-

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில், ஸ்ரீவைகுண்டம்.**
2. **தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி. சென்னை.**

அச்சிட்டது :— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 52.